12441

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

16.08.2019 / 1400 – 1600

දේශපාලන විද්‍යාව I
அரசியல் விஞ்ஞானம் I
Political Science I

23 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

* இவ்வினாத்தாள் **A, B** ஆகிய இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.
* பகுதி **A 30** பல்தேர்வு வினாக்களையும் பகுதி **B 20** குறு வினாக்களையும் கொண்டுள்ளது.
* சகல வினாக்களுக்குமான விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுத வேண்டும்.
* ஒரு விடைக்கு இரண்டு புள்ளிகள் வீதம் மொத்தம் **100** புள்ளிகள் வழங்கப்படும்.

## பகுதி A

● **1** தொடக்கம் **20** வரையிலான வினாக்களுக்கு **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.

**1.** அரசியல் என்பது,
(1) அரசு மற்றும் மக்களுக்கிடையில் நிலவும் ஒரு தொடர்புத்துறையாகும்.
(2) அரசாங்கத்தின் செயற்பாடுகளுடன் மாத்திரம் வரையறுக்கப்பட்டதாகும்.
(3) அரசு மற்றும் அரசாங்கம் தொடர்பான கற்கை ஆகும்.
(4) பொதுக் கொள்கை அமுலாக்கத்துடன் மாத்திரம் வரையறுக்கப்பட்டதாகும்.
(5) ஆன்மீக வாழ்க்கையினை முகாமை செய்வதுடன் தொடர்புடையதாகும். (……)

**2.** அரசியலைக் கற்பது என்பது,
(1) எப்போதும் நெறிமுறை சார் விசாரணைகளுடன் வரையறுக்கப்பட்டது.
(2) அதிகார போராட்டம் பற்றிய கற்கையுடன் மாத்திரம் வரையறுக்கப்பட்டது.
(3) விஞ்ஞான ரீதியிலான பரிசீலனையுடன் மாத்திரம் அடையாளப்படுத்தப்படுகின்றது.
(4) இயற்கை விஞ்ஞானங்களின் நிலைக்கு முதிர்ச்சியடைந்துள்ளது.
(5) விஞ்ஞானம் மற்றும் நெறிமுறை ஆகிய இரு விடயங்களையும் கவனத்தில் கொண்டுள்ளது. (……)

**3.** அரசாங்கம் என்பது,
(1) மாற்ற முடியாத ஒரு நிறுவனம் ஆகும்.
(2) ஜனநாயக முறைகளில் மக்களின் ஏக பிரதிநிதியாகும்.
(3) அரசின் ஒரு பிரதான மூலக்கூறு ஆகும்.
(4) அரசுக்கு சமாந்தரமான பதமாகும்.
(5) அரசை விட பலமானதாகும். (……)

**4.** பெண்ணியவாதம்
(1) பெண் பிள்ளைகளுக்கு தனியான பாடசாலைகளை முன்மொழிகின்றது.
(2) சமத்துவத்தை புறக்கணிக்கின்றது.
(3) கிரேக்க காலத்தில் தோற்றம் பெற்ற ஒரு கருத்தியல்.
(4) பெண்களால் அனுபவிக்கப்படும் பாரபட்சங்களை முடிவுக்கு கொண்டுவர எத்தனிக்கின்றது.
(5) குடும்ப நலனின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. (……)

**5.** இறைமை
(1) பெரிய மற்றும் சிறிய அரசுகளுக்கிடையிலான அசமத்துவத்தினை ஏற்றுக்கொள்கின்றது.
(2) அரசின் மீயுயர் அதிகாரத்தை குறித்து நிற்கின்றது.
(3) உலகமயமாக்கலின் காரணமாக சவாலுக்கு உட்படுத்தப்படவில்லை.
(4) அவசியம் ஏற்படும்போது இலகுவில் பிரிக்கப்படக்கூடியது.
(5) அரசத்துவத்திற்கு அவசியமானதொரு நிபந்தனை அல்ல. (……)

tamilguru.lk

[பக். 2 ஐப் பார்க்க

**6.** ஒற்றையாட்சி அரசாங்க முறையொன்றில்,
(1) இறைமை பகிரப்படுவதில்லை.
(2) இறைமை பிராந்திய அரசாங்கங்களுடன் பகிரப்படுகிறது.
(3) சட்டத்துறை இரண்டாவது சபையைக் கொண்டிருத்தல் அவசியமானதொரு பண்பாகும்.
(4) உச்ச நீதிமன்றம் மத்திய மற்றும் மாகாண அரசாங்கங்களுக்கிடையிலான பிணக்குகளை தீர்த்து வைக்கின்றது.
(5) பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரம் மட்டுப்படுத்தப்படுகின்றது. (……)

**7.** கூட்டு சமஷ்டி அரசாங்கமுறை
(1) சுதந்திர அரசுகளுக்கிடையிலான சுயாதீனமான ஒரு ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்டதல்ல.
(2) ஏனைய அரசாங்க முறைகளை விட வினைத்திறன் மிக்கது.
(3) பலமான மத்திய அரசாங்கத்தைக் கொண்டது.
(4) ஐக்கிய அமெரிக்காவின் தற்போதைய அரசியல் அமைப்புக்கு முன்னர் காணப்பட்டது.
(5) தனியானதொரு சட்டமுறைமையினைக் கொண்டுள்ளது. (……)

**8.** பொதுக் கொள்கை
(1) பொது மக்களின் மனக்குறைகளை தீர்ப்பதுடன் தொடர்புடையது அல்ல.
(2) பணியகவமைப்பிற்கு ஒரு முக்கியமான வகிபங்கினை வழங்குவதில்லை.
(3) அரச - தனியார் பங்குடமையினை ஊக்குவிப்பதில்லை.
(4) பொது மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உபாயங்களைத் தீர்மானிக்கின்றது.
(5) அரசியல் கட்சிகளின் செல்வாக்கில் இருந்து முழுமையாக விடுபட்டது. (……)

**9.** ஜனாதிபதித்துவ அரசாங்க முறை
(1) நிர்வாக மற்றும் சட்டத்துறைகளுக்கு தனித்தனியான தேர்தல்களுக்கான வாய்ப்பை வழங்குகின்றது.
(2) நிர்வாக மற்றும் சட்டத்துறைகளின் அதிகாரங்களை இணைப்பதற்கு வழிசெய்கின்றது.
(3) ஜனாதிபதியை நாம நிர்வாகத்தின் தலைவராக நோக்குகின்றது.
(4) ஜனாதிபதியை சட்ட சபைக்கு பொறுப்புக்கூறச் செய்கிறது.
(5) ஜனாதிபதிக்கு சட்டசபையை மீறிச்செல்வதற்கான இயலுமையை வழங்குகின்றது. (……)

**10.** முரண்பாடுகள் தொடர்பான சரியான கூற்றினைத் தெரிவுசெய்க
(1) முரண்பாடுகள் எப்போதும் எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும்.
(2) தரப்பினர்களுக்கிடையிலான ஒவ்வாத இலக்குகளின் காரணமாக முரண்பாடுகள் தோற்றம் பெறுகின்றன.
(3) முரண்பாடுகள் சமூக வாழ்க்கைக்கு தொடர்பற்றவை.
(4) வன்முறைசார் முரண்பாடுகளை பேச்சுவார்த்தைகள் மூலம் நிலை மாற்றம் செய்வது கடினமாகும்.
(5) முரண்பாடுகள் சமூக மாற்றத்திற்கு பங்களிப்பு செய்வதில்லை. (……)

**11.** சர்வதேச அரசியலின் பிரதான செயற்பாட்டாளர்களாவது
(1) சர்வதேச நிதி மற்றும் கலாசார ஒழுங்கமைப்புக்கள்.
(2) பல்தேசிய கம்பனிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள்.
(3) அரசு சார்ந்த மற்றும் அரச சாரா செயற்பாட்டாளர்கள்.
(4) அரசியல் கட்சிகள் மற்றும் உயர் குழாமினர்.
(5) சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சமூக இயக்கங்கள். (……)

More Past Papers at
tamilguru.lk

**12.** சோசலிச கருத்தியல்
(1) அரசின் இருப்பை சகல சமூக முறைமைகளிலும் அவசியமானதாக கருதுகின்றது.
(2) தனியார் சொத்துரிமையினை ஏற்றுக்கொள்கின்றது.
(3) முதலாளித்துவ முறையினை மறுசீரமைக்க எத்தனிக்கின்றது.
(4) சமூக வாழ்க்கையில் மதத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.
(5) வர்க்கமற்ற சமூகம் ஒன்றுக்கான தேவையினை வலியுறுத்துகின்றது. (……)

[பக். 3 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

**13.** நவீன வெளிநாட்டுக் கொள்கையின் சட்டரீதியான வழிமுறைகளில் **உள்ளடங்காததொன்று** எது?
(1) இராஜதந்திர சேவை (2) வெளிநாட்டு உதவி (3) இராணுவ மூலோபாயம்
(4) கலாசார உறவுகள் (5) மதம் மாற்றுதல் (……)

**14.** இந்திய சமஷ்டி முறைக்குப் **பொருத்தமில்லாத** கூற்று எது?
(1) மத்திய அரசாங்கத்திற்கு மாநிலங்களை உருவாக்கவும் அவற்றின் பெயர்களை மாற்றவும் முடியும்.
(2) மத்திய அரசாங்கத்திற்கு அவசரகால நிலையின்போது ஒற்றையாட்சி அரசாங்கமாக செயற்பட முடியும்.
(3) மத்திய அரசாங்கத்திற்கு மாநிலங்களின் சட்ட மற்றும் நிர்வாக அதிகாரங்களைக் கட்டுப்படுத்த முடியும்.
(4) இந்திய சமஷ்டி முறைமை ஐக்கிய அமெரிக்க சமஷ்டி முறைமைக்கு ஒப்பானது.
(5) அரசியலமைப்பு ஒற்றையாட்சி மற்றும் சமஷ்டிக்குரிய பண்புகளைக் கொண்டுள்ளது. (……)

**15.** டொனமூர் சீர்திருத்தம் தொடர்பான **பிழையான** கூற்றினைத் தெரிவுசெய்க
(1) சர்வசன வாக்குரிமையின் ஊடாக சாதாரண மக்களை பலப்படுத்தியது.
(2) நலன்புரி அரசுக்கான அடித்தளத்தை இட்டது.
(3) பொறுப்புக் கூறும் அரசாங்கத்துக்காக உள்நாட்டு அரசியல் தலைவர்களை வழிப்படுத்தியது.
(4) அரசியல்வாதிகளை சாதாரண மக்களின் மீது தங்கியிருக்கச் செய்தது.
(5) அமைச்சர்கள் சபையில் கூட்டுப்பொறுப்பு என்ற தத்துவத்தினை அறிமுகம் செய்தது. (……)

**16.** **பிழையான** கூற்றினைத் தெரிவு செய்க.
(1) தாராளவாதிகள் அரசினை சமூகத்தின் நடுநிலையான மத்தியஸ்த்தராக நோக்குகின்றனர்.
(2) பெண்ணியவாதிகள் அரசினை ஆண் ஆதிக்கத்தின் நிறுவனமாக நோக்குகின்றனர்.
(3) பாசிசவாதிகள் அரசினை சமூகத்தினைவிட கீழானதாக நோக்குகின்றனர்.
(4) சமூக ஜனநாயகவாதிகள் அரசினை பொது நன்மையின் அங்கமாக நோக்குகின்றனர்.
(5) மார்க்சியவாதிகள் அரசினை ஆளும் வர்க்கத்தின் கருவியாக நோக்குகின்றனர். (……)

**17.** ஐக்கிய அமெரிக்க அரசியல் திட்ட மாதிரியுடன் தொடர்புடைய **பிழையான** கூற்று எது?
(1) மத்திய அரசாங்கம் மற்றும் மாநில அரசாங்கங்களுக்குமிடையிலான பிணக்குகளை உச்ச நீதிமன்றம் தீர்த்து வைக்கிறது.
(2) சகல மாநிலங்களும் சமமான அதிகாரத்தினை அனுபவிப்பதில்லை.
(3) எஞ்சிய அதிகாரங்கள் மாநிலங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.
(4) நீதித்துறையின் தீர்ப்புகள் மத்திய அரசாங்கத்தின் அதிகார எல்லையை விரிவுபடுத்தியுள்ளன.
(5) அரசியலமைப்பினை திருத்துவதற்கு மாநிலங்களின் சம்மதம் அவசியமாக காணப்படுதல் (……)

**18.** கோல்புரூக் - கெமரன் ஆணைக்குழுவின் சீர்திருத்தங்களுடன் தொடர்புடைய சரியான கூற்றினைத் தெரிவு செய்க.
(1) தன்னிறைவுப் பொருளாதாரத்தைப் பாதுகாத்தமை.
(2) மரபு ரீதியான சமூக நடைமுறைகளை மாற்றம் செய்யாமை.
(3) சுயாதீனமான நீதித்துறையொன்றினை தாபித்தமை.
(4) உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக நிலமானிய முறையினைப் பயன்படுத்தியமை.
(5) ஆளுனரின் அதிகாரத்தை அதிகரித்தமை. (……)

**19.** 1972 ஆம் ஆண்டு குடியரசு அரசியல் யாப்புடன் தொடர்புடைய சரியான கூற்று எது?
(1) அது மக்கள் இறைமை என்ற எண்ணக்கருவை அடிப்படையாகக் கொண்டமைந்தது.
(2) அது அதிகார பிரிவினைத் தத்துவத்தினை அறிமுகம் செய்தது.
(3) அது அடிப்படை உரிமை மீறலுக்கான சட்ட நிவாரணத்தை அறிமுகம் செய்தது.
(4) அது மொழி உரிமையினை அறிமுகம் செய்தது.
(5) அது சுயாதீன பொதுச் சேவை ஆணைக்குழுவொன்றினை தாபித்தது. (……)

[பக். 4 ஐப் பார்க்க

**20.** 'சட்டத்தின் ஆட்சி' என்ற எண்ணக்கருவுடன் தொடர்புடைய பொருத்தமான கூற்றினைத் தெரிவுசெய்க.
(1) எதேச்சை ஆட்சியினை தடுப்பதனை நோக்காகக் கொண்டது.
(2) ஆட்சியாளர்கள் தற்துணிவு அதிகாரத்தை பிரயோகிக்க அனுமதிக்கின்றது.
(3) ஆட்சியாளர்களுக்கு விடுபாட்டுரிமையினை உறுதிசெய்கின்றது.
(4) கடந்தகாலத்தைப் பாதிக்கும் சட்டங்களின் உறுதித்தன்மையினை ஏற்றுக்கொள்கின்றது.
(5) தனிநபர் உரிமைகளை கட்டுப்படுத்துகின்றது. (……)

● **21** தொடக்கம் **25** வரையிலான வினாக்களிற்கு தரப்பட்டுள்ள கூற்றுகளில் **சரியான கூற்றுத் தொகுதியினைக்** கொண்ட விடையைத் தெரிவுசெய்க.

More Past Papers at
tamilguru.lk

**21.** தாராளவாதக் கருத்தியல்
A - தனிநபர் சுதந்திரம் என்ற கருத்தினை வலியுறுத்துகின்றது.
B - ஜனநாயகம் என்ற பெயரில் சுதந்திரத்தை மட்டுப்படுத்துகின்றது.
C - ஐரோப்பாவில் நிலமானிய முறையின் வீழ்ச்சியுடன் எழுச்சி பெற்றது.
D - வரையறுக்கப்பட்ட அரசாங்கத்தின் அவசியத்தை முன்நிறுத்துகின்றது.
E - திறந்த சந்தைப் பொருளாதார முறையினை எதிர்க்கின்றது.
(1) ABCE (2) ABD (3) ACD (4) BCD (5) BCDE (……)

**22.** சிவில் சமூகம்
A - அரசுக்கு வெளியே காணப்படும் சமூகப் பரப்பாகும்.
B - தன்னார்வ தொண்டு நிறுவனங்களை உள்ளடக்கியது.
C - கொள்கைப் பரப்புரையில் ஈடுபடுகின்றது.
D - பிரஜைகளை வலுவூட்டுகின்றது.
E - ஒரு அரசியல் சார்பற்ற தளம்.
(1) ABCD (2) ABDE (3) ACDE (4) BCD (5) BCDE (……)

**23.** அரசியல் கட்சிகள்
A - அரசாங்கத்திலிருந்து மக்களை அந்நியப்படுத்துகின்றது.
B - அரசியல் பதவிகளுக்கு தலைவர்களை ஆட்சேர்க்கின்றது.
C - முக்கியமான அரசியல் பிரச்சினைகள் தொடர்பாக பொது மக்களுக்கு அறிவூட்டுகின்றது.
D - பொதுக்கொள்கை செயன்முறைக்கு பொதுஜன அபிப்பிராயத்தை கொண்டு வருகின்றது.
E - ஆட்சிமுறையில் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்றது.
(1) ABCD (2) ACE (3) ADE (4) BCDE (5) BDE (……)

**24.** அதிகாரப் பிரிவினை எண்ணக்கரு
A - அரசாங்க அதிகாரத்தில் தடைகள் மற்றும் சமன்பாடுகளை வலியுறுத்துகின்றது.
B - அரசாங்கத்தின் அதிகாரத்தை நிறுவன ரீதியாக பிரிப்பதனை வலியுறுத்துகின்றது.
C - பொதுவாக அனைத்தாண்மை அரசுகளில் பிரயோகிக்கப்படுகின்றது.
D - அரசாங்கத்தின் எதேச்சையான செயற்பாடுகளை தடுப்பதற்கு முற்படுகின்றது.
E - மொண்டஸ்கியூவினால் அறிமுகப்படுத்தப்பட்டது.
(1) ABCD (2) ABDE (3) ACDE (4) BCDE (5) CDE (……)

**25.** ஜனநாயக ஆட்சிமுறைக்குப் பொருத்தமான இயல்புகளைத் தெரிவுசெய்க.
A - சுதந்திரமான நீதித்துறை
B - பொறுப்புக் கூறுகின்ற ஆட்சிமுறை
C - சட்டத்தின் ஆட்சி
D - துடிப்பான சிவில் சமூகம்
E - போட்டித்தன்மையில்லாத தேர்தல்
(1) ABC (2) ABCD (3) BCD (4) BCDE (5) CDE (……)

[பக். 5 ஐப் பார்க்க

- **26** தொடக்கம் **30** வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள **(1), (2), (3), (4)** மற்றும் **(5)** ஆகிய விடைகளில் இருந்து தரப்பட்டுள்ள இரு கூற்றுக்களுக்கும் மிகச்சரியாகப் பொருந்தும் விடை இலக்கத்தினை தெரிவுசெய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதல் கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| **26.** | இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பிற்கான 19 வது சீர்திருத்தத்தின்படி ஜனாதிபதியால் பிரதமர் நியமிக்கப்படுகின்றார். | பாராளுமன்றத்தில் அதிக நம்பிக்கையைக் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் ஜனாதிபதியால் பிரதமராக நியமிக்கப்படல் வேண்டும். (......) |
| **27.** | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 18 வது சீர்திருத்தம் சுயாதீன ஆணைக்குழுக்களை பலவீனப்படுத்தியது. | 18 வது அரசியலமைப்பு சீர்திருத்தம் ஜனாதிபதியினுடைய பதவி தவணைக்கால மட்டுப்பாட்டினை நீக்கியது. (......) |
| **28.** | 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பிற்கான 13 வது சீர்திருத்தம் மாகாணசபை முறையினை அறிமுகம் செய்தது. | மாகாணசபை முறை எல்லா வழிகளிலும் இந்திய சமஷ்டி முறைக்கு ஒப்பானது. (......) |
| **29.** | இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பு இரு மன்றங்களைக் கொண்ட சட்டசபைக்கு வழிசெய்தது. | இரண்டாவது குடியரசு அரசியல் யாப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயம் குழு உரிமையினை அங்கீகரித்துள்ளது. (......) |
| **30.** | 1978 ஆம் ஆண்டு மூல அரசியல் யாப்பானது பொதுத் தேர்தலுக்கு விருப்பு வாக்குடன் கூடிய விகிதாசார முறையினை அறிமுகம் செய்தது. | விகிதாசார பிரதித்துவ முறையானது கட்சித் தலைமைத்துவத்தின் அதிகாரத்தைப் பலப்படுத்தியுள்ளது. (......) |

[பக். 6 ஐப் பார்க்க

More Past Papers at tamilguru.lk

## பகுதி B

**31.** சமஷ்டி அரசாங்க முறையின் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

**32.** சமஷ்டி அரசாங்கமுறை உருவாகுவதில் **இரண்டு** வழிமுறைகள் காணப்படுகின்றன. அவ்விரு வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

**33.** ஒற்றையாட்சி அரசாங்க முறையின் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

**34.** ஜனாதிபதித்துவ அரசாங்க முறையொன்றில் சட்டத்துறைக்கும் நிர்வாகத்துறைக்கும் இடையில் **இரு** பிரதான வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவ்விரு வேறுபாடுகளையும் குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

**35.** காலனித்துவத்தை உருவாக்குவதற்கு **இரு** வழிமுறைகள் காணப்படுகின்றன. அவ்விரு வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

**36.** இலங்கையில் அரசியலமைப்பு சீர்திருத்தங்களை அறிமுகம் செய்வதற்கு காலனித்துவ ஆட்சியாளர்களைத் தூண்டிய **இரு** காரணிகளைக் குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

**37.** பின்வரும் விடயங்கள் தொடர்பாக கோல்புருக் - கெமரன் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளில் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

நீதித்துறை - ..........................................................................................................

தேசாதிபதியின் அதிகாரங்கள் - ..........................................................................................................

**38.** ஒரு அரசின் வெளிநாட்டுக் கொள்கையினைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................................

(ii) ..........................................................................................................

[பக். 7 ஐப் பார்க்க

**39.** அரசியல் விஞ்ஞான பரிசீலனைக்கான மரபுரீதியான அணுகுமுறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

**40.** பின்வரும் கூற்றுக்களால் விபரிக்கப்படும் சமூகத்திலுள்ள **இரண்டு** அரசியல் தாபனங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(i) இறைமை அதிகாரத்தைக் கொண்ட மத்திய நிறுவனம் :

..........................................................................................

(ii) அரசின் பிரதான முகவர் :

..........................................................................................

**41.** ஜனநாயக சமூகங்களில் அரசியல் கட்சிகளின் பணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

**42.** நவீன தேசிய அரசின் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

**43.** குடியரசுவாதத்தின் **இரண்டு** பிரதான அனுமானங்களைப் பெயரிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

**44.** சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் பாராளுமன்றம் மூன்று நிறுவனங்களைக் கொண்டிருந்தது. அவற்றில் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

**45.** பொதுக் கொள்கை வாழ்க்கை வட்டத்தின் எவையேனும் **இரண்டு** கட்டங்களைப் பெயரிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

**46.** அரசின் பரிணாம வளர்ச்சி தொடர்பாக மார்க்சியவாதக் கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் **இரண்டு** கட்டங்களைக் குறிப்பிடுக.

(i) ..........................................................................................

(ii) ..........................................................................................

[பக். 8 ஐப் பார்க்க

**47.** முரண்பாடு தொடர்பான அரசியல் வகைப்படுத்தலுக்கிணங்க முரண்பாட்டின் **இரு** வகைகளைக் குறிப்பிடுக.

(i) ........................................................................................................

(ii) ........................................................................................................

**48.** 'வரையறுக்கப்பட்ட அரசாங்கம்' என்ற எண்ணக்கருவின் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ........................................................................................................

(ii) ........................................................................................................

**49.** 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் 13 வது சீர்திருத்தத்திற்கமைய மாகாண சபையொன்றின் நிறைவேற்றுத் துறை இரு நிறுவனங்களைக் கொண்டுள்ளது. **அவ்விரு** நிறுவனங்களையும் குறிப்பிடுக.

(i) ........................................................................................................

(ii) ........................................................................................................

**50.** வெஸ்ட் மின்ஸ்டர் மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட சுதந்திர இலங்கையின் **இரு** அரசியலமைப்புகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

(i) ........................................................................................................

(ii) ........................................................................................................

* * *

More Past Papers at tamilguru.lk

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2019 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2019 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2019

දේශපාලන විද්‍යාව II
அரசியல் விஞ்ஞானம் II
Political Science II

23 T II

19.08.2019 / 1300 – 1610

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :**

※ இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டதாகும்.

※ பகுதி **I** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் பகுதி **II** இலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையும் பகுதி **III** இலிருந்து குறைந்தபட்சம் **ஒரு** வினாவையும் தெரிவுசெய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## பகுதி I

**1.** "அரசியல் என்பது ஒரு சமூகப் பயன்பாடாகும்." விளக்குக. (20 புள்ளிகள்)

**2.** "அரசு சமூகத்தில் காணப்படும் அரசியல் அதிகாரத்தின் மைய நிறுவனம் ஆகும்." ஆராய்க. (20 புள்ளிகள்)

**3.** மந்திரி சபை அரசாங்கமுறை மற்றும் ஜனாதிபதித்துவ அரசாங்க முறையை ஒப்பிடுக. (20 புள்ளிகள்)

## பகுதி II

**4.** இலங்கையில் காலனித்துவ நிலைமாற்றத்தினால் ஏற்பட்ட அரசியல் விளைவுகளை ஆராய்க. (20 புள்ளிகள்)

tamilguru.lk

**5.** சோல்பரி அரசியல் யாப்புடன் தொடர்புடைய பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினை** ஆராய்க:

(i) அரசியல் யாப்பிற்கு எதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள்

(ii) நிறைவேற்றுத் துறையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்

(iii) சட்டத்துறையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் (10 × 2 = 20 புள்ளிகள்)

**6.** 1972 ஆம் ஆண்டு குடியரசு அரசியல் யாப்பின் கீழ் சட்ட மற்றும் நிர்வாகத் துறைகளுக்கிடையிலான தொடர்பினை ஆராய்க. (20 புள்ளிகள்)

**7.** 1978 ஆம் ஆண்டு மூல அரசியல் யாப்பு மற்றும் அத்துடன் தொடர்புடைய சீர்திருத்தங்கள் தொடர்பான பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் **இரண்டினை** ஆராய்க:

(i) அரசின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதியின் வகிபங்கு.

(ii) சட்டத்துறையின் அதிகாரங்களும் அவற்றின் மீதான மட்டுப்பாடுகளும்.

(iii) அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் நீதித்துறையின் பொறுப்பு

(iv) அரசியல் அமைப்புப் பேரவையின் முக்கியத்துவமும் அதற்கெதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங்களும். (10 × 2 = 20 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

## பகுதி III

**8.** இந்திய சமஷ்டி அரசாங்க மாதிரியினை ஓர் அரைகுறை சமஷ்டி முறை என விபரிப்பதற்கான காரணங்களை விளக்குக. (20 புள்ளிகள்)

**9.** உலக அரசியலின் சமகால போக்குகள் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றன என்பதனை விளக்குக. (20 புள்ளிகள்)

**10.** பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டிற்குச்** சிறுகுறிப்புகள் எழுதுக:

(i) தேசியவாதம்

(ii) மதச்சார்பின்மைவாதம்

(ii) முரண்பாட்டு முகாமைத்துவம்

(iv) சிவில் சமூகம் என்ற எண்ணக்கருவின் பொருள்

(v) அதிகாரம் பற்றிய பெண்ணியவாதிகளின் நோக்கு (10 × 2 = 20 புள்ளிகள்)

More Past Papers at
tamilguru.lk

* * *

More Past Papers at tamilguru.lk

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2019

නව නිර්දේශය/ புதிய பாடத்திட்டம்

විෂය අංකය / பாட இலக்கம்: **23**    විෂයය / பாடம்: **அரசியல் விஞ்ஞானம்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|
| 01. | 1 | 11. | 3 | 21. | 3 |
| 02. | 5 | 12. | 5 | 22. | 1 |
| 03. | 3 | 13. | 5 | 23. | 4 |
| 04. | 4 | 14. | 4 | 24. | 2 |
| 05. | 2 | 15. | 5 | 25. | 2 |
| 06. | 1 | 16. | 3 | 26. | 5 |
| 07. | 4 | 17. | 2 | 27. | 1 |
| 08. | 4 | 18. | 3 | 28. | 2 |
| 09. | 1 | 19. | 1 | 29. | 4 |
| 10. | 2 | 20. | 1 | 30. | 3 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 30 = 60

## பகுதி B

**31.** சமஷ்டி அரசாங்க முறையின் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

**32.** சமஷ்டி அரசாங்கமுறை உருவாகுவதில் **இரண்டு** வழிமுறைகள் காணப்படுகின்றன. அவ்விரு வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

**33.** ஒற்றையாட்சி அரசாங்க முறையின் நன்மைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

**34.** ஜனாதிபதித்துவ அரசாங்க முறையொன்றில் சட்டத்துறைக்கும் நிர்வாகத்துறைக்கும் இடையில் **இரு** பிரதான வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவ்விரு வேறுபாடுகளையும் குறிப்பிடுக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

**35.** காலனித்துவத்தை உருவாக்குவதற்கு **இரு** வழிமுறைகள் காணப்படுகின்றன. அவ்விரு வழிமுறைகளைக் குறிப்பிடுக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

**36.** இலங்கையில் அரசியலமைப்பு சீர்திருத்தங்களை அறிமுகம் செய்வதற்கு காலனித்துவ ஆட்சியாளர்களைத் தூண்டிய **இரு** காரணிகளைக் குறிப்பிடுக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

**37.** பின்வரும் விடயங்கள் தொடர்பாக கோல்புரூக் - கெமரன் ஆணைக்குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளில் ஒவ்வொன்றைக் குறிப்பிடுக.

நீதித்துறை - ..............................................................................................................

தேசாதிபதியின் அதிகாரங்கள் - ..............................................................................................

**38.** ஒரு அரசின் வெளிநாட்டுக் கொள்கையினைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

**39.** அரசியல் விஞ்ஞான பரிசீலனைக்கான மரபுரீதியான அணுகுமுறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ........................................................................................................................

(ii) ........................................................................................................................

**40.** பின்வரும் கூற்றுக்களால் விபரிக்கப்படும் சமூகத்திலுள்ள **இரண்டு** அரசியல் தாபனங்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

(i) இறைமை அதிகாரத்தைக் கொண்ட மத்திய நிறுவனம் :

........................................................................................................................

(ii) அரசின் பிரதான முகவர் :

........................................................................................................................

**41.** ஜனநாயக சமூகங்களில் அரசியல் கட்சிகளின் பணிகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ........................................................................................................................

(ii) ........................................................................................................................

**42.** நவீன தேசிய அரசின் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ........................................................................................................................

(ii) ........................................................................................................................

**43.** குடியரசுவாதத்தின் **இரண்டு** பிரதான அனுமானங்களைப் பெயரிடுக.

(i) ........................................................................................................................

(ii) ........................................................................................................................

**44.** சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் பாராளுமன்றம் மூன்று நிறுவனங்களைக் கொண்டிருந்தது. அவற்றில் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக.

(i) ........................................................................................................................

(ii) ........................................................................................................................

**45.** பொதுக் கொள்கை வாழ்க்கை வட்டத்தின் எவையேனும் **இரண்டு** கட்டங்களைப் பெயரிடுக.

(i) ........................................................................................................................

(ii) ........................................................................................................................

**46.** அரசின் பரிணாம வளர்ச்சி தொடர்பாக மார்க்சியவாதக் கோட்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் **இரண்டு** கட்டங்களைக் குறிப்பிடுக.

(i) ........................................................................................................................

(ii) ........................................................................................................................

**47.** முரண்பாடு தொடர்பான அரசியல் வகைப்படுத்தலுக்கிணங்க முரண்பாட்டின் **இரு** வகைகளைக் குறிப்பிடுக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

**48.** ‘வரையறுக்கப்பட்ட அரசாங்கம்’ என்ற எண்ணக்கருவின் பண்புகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

**49.** 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் 13 வது சீர்திருத்தத்திற்கமைய மாகாண சபையொன்றின் நிறைவேற்றுத் துறை இரு நிறுவனங்களைக் கொண்டுள்ளது. **அவ்விரு** நிறுவனங்களையும் குறிப்பிடுக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

**50.** வெஸ்ட் மின்ஸ்டர் மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட சுதந்திர இலங்கையின் **இரு** அரசியலமைப்புகளின் பெயர்களைக் குறிப்பிடுக.

(i) ..............................................................................................................

(ii) ..............................................................................................................

* * *

# வினாப்பத்திரம் I
# பகுதி B

## 31 - 50 வரையுள்ள ஒவ்வொரு குறு வினாவுக்குமுரிய விடைகள்

**வினா இல : 31**

- இறைமை அதிகாரம் மத்திய மற்றும் பிராந்திய அரசாங்கங்களுக்கிடையே பகிரப்பட்டிருத்தல்.
- ஒப்பீட்டு ரீதியில் இருவகையான அரசாங்கங்கள் காணப்படல்.
- நெகிழா அரசியலமைப்பு
- மத்திய அரசாங்கத்தில் ஈரவை சட்டத்துறை காணப்படல்.
- அரசியலமைப்பிற்கு வியாக்கியானம் செய்யும் அதிகாரம் உயர் நீதிமன்றுக்கு அல்லது அரசியலமைப்பு நீதிமன்றுக்கு வழங்கப்பட்டுள்ளமை.
- மத்திய அரசாங்கம் மற்றும் பிராந்திய அரசாங்கங்களுக்கிடையில் முரண்பாடுகளை தீர்க்கும் பொறுப்பு உயர்நீதிமன்றம் அல்லது அரசியலமைப்பு நீதிமன்றத்திடம் காணப்படும்.
- இரட்டைக் குடியுரிமை / இரு தளங்களிலான குடியுரிமை காணப்படல்.

**வினா இல : 32**

1. சுயாதீன அரசுகளாகக் காணப்பட்ட அரசியல் அலகுகள் ஒன்றிணைந்து சமஸ்டி அரசாக மாறுதல்.
2. ஒற்றையாட்சி அரசொன்று சமஷ்டி அரசாக மாறுதல்.

**வினா இல : 33**

- ஆட்சிமுறை செயற்பாடுகளின் சிக்கல் குறைந்துள்ளமை.
- ஒப்பீட்டு ரீதியாக செயற்றிறன்மிக்க அரசியலமைப்பாகும்.
- தீர்மானமெடுத்தல் இலகுவாக அமையும்

**வினா இல : 34**

- சட்டத்துறையும் நிறைவேற்றுத்துறையும் தனித்தனியாக தெரிவு செய்யப்படல்.
- சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறையின் பதவிகாலம் சமமற்றுக் காணப்படல்

**வினா இல : 35**

- புதிய அரசொன்றினைக் கைப்பற்றி அங்கு வாழும் மக்களை தாய்நாட்டு அரசின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தி புதிய அரசை உருவாக்குதல்
- முன்னர் காணப்பட்ட அதிகாரமிக்க அரசொன்று உடன்படிக்கை அல்லது யுத்த பலத்தினால் குடியேற்றங்களை கைப்பற்றி தமது ஆதிக்கத்திற்கு உட்படுத்தி ஆட்சி செய்தல்.

**வினா இல : 36**

- பாதுகாப்பு மற்றும் நிர்வாக செலவுகளை குறைத்துக் கொள்ள
- நேரடியாக காலனித்துவ நிர்வாகத்தை மேற்கொள்வதில் இருந்த சிக்கல்கள்
- காலனித்துவத்தை தாய் நாட்டின் நன்மைக்காக பயன்படுத்துவதற்காக
- காலனித்துவத்தின் கலாசாரங்களை காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு ஏற்ப மாற்ற வேண்டிய தேவை
- சுதேசியர்களின் கோரிக்கை

**வினா இல : 37**

1. நீதிமன்றம்
   - ஒரு சீரான குற்றவியல் சட்டம் / குற்றவியல் சட்ட முறையின் அறிமுகம்
   - சுயாதீனமானதும் முறையானதுமான நீதிமன்றத்தை உருவாக்கியமை

2. ஆளுநரின் அதிகாரங்கள்
   - ஆளுநரின் அதிகாரங்களைக் குறைப்பதற்காக சட்டக்கழகம், நிறைவேற்றுக்கழகம் உருவாக்கியமை (சட்டநிரூபன சபை மற்றும் சட்ட நிர்வாகசபை)

**வினா இல : 38**

- புவிசார் அமைவிடம்
- சமூக மற்றும் கலாசார காரணிகள்
- அரசியல் பொருளாதாரம்
- ஆட்சியாளர்களின் அரசியல் அபிலாசைகள்
- பிராந்திய மற்றும் சர்வதேச வலுச்சமநிலை
- மக்களின் எதிர்ப்பார்ப்பு மற்றும் ஆதிக்கப் பார்வை
- அரசியல் கட்சிகளின் கருத்தியல்
- தேசிய நலன்
- தேசிய பாதுகாப்பு
- ஆட்சியிலிருக்கும் அரசியல் கட்சிகளின் கருத்தியல்

**வினா இல : 39**

- தத்துவ அணுகுமுறை
- ஒப்பீட்டு அணுகுமுறை
- வரலாற்று அணுகுமுறை
- நிறுவன அணுகுமுறை
- சட்ட அணுகுமுறை

**வினா இல : 40**

1. இறைமை காணப்படும் ஒரே நிறுவனம் – அரசு

2. அரசின் பிரதான முகவர் – அரசாங்கம்

**வினா இல : 41**

- பிரதிநிதித்துவத்தின் பிரதான ஊடகமாக செயற்படுதல்
- அரசியல் உயர் குழாமினரை உருவாக்குதல் மற்றும் ஆட்சேர்ப்பு
- சமூகக் குழுக்களின் அரசியல் நோக்கங்களை உருவாக்குதல்
- பொதுமக்கள் / வாக்காளர் அபிலாசைகளை அரசியல் செயன்முறைக்குள் கொண்டு செல்லல்.
- அரசாங்கத்தின் செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்

**வினா இல : 42**

ஒரு தேசம் ஓர் அரசு எனும் சித்தாந்தத்தின் அடிப்படையில் தோற்றம் பெற்றமை.

- அரசின் முன்னுரிமை

- குறிக்கப்பட்ட ஆள்புலம் காணப்படல்
- அரச அதிகாரம் மையப்படுத்தப்பட்டிருத்தல்
- ஒரு இனத்திற்கு ஒரு கலாசாரம் மற்றும் தேசிய அடையாளம் காணப்படல்
- பன்மைவாதம்
- உள்வாரி மற்றும் வெளிவாரி இறைமை

**வினா இல : 43**

- அரசின் தலைவர் மக்களால் தெரிவு செய்யப்படல்.
- மக்கள் இறைமையை ஏற்றுக் கொள்ளல்
- அரசியல் ரீதியாக துடிப்புமிக்க பிரசைகளின் செயற்பாடு
- முடியாட்சி முறைக்கு எதிரானது.

**வினா இல : 44**

- மகாதேசாதிபதி / முடி
- செனட் / மேற்சபை / இரண்டாம் சபை
- பொதுமக்கள் சபை / பிரதிநிதிகள் சபை / கீழ் சபை

**வினா இல : 45**

- கொள்கை நிகழ்ச்சி நிரலை தயாரித்தல்
- கொள்கைத் தீர்மானம் எடுத்தல்
- கொள்கை உருவாக்கம்
- கொள்கை அமுலாக்கம்
- கொள்கை மதிப்பீடு
- கொள்கைகளை முடிவுறுத்தல்

**வினா இல : 46**

- புரதான கம்யூனிச சமூகம் / ஆரம்ப கம்யூனிச யுகம்
- அடிமை முறை சமூகம் / ஆண்டான் அடிமை சமூகம்
- மானிய முறை சமூகம் / நிலமானிய சமூகம்
- முதலாளித்துவ சமூகம்
- சமவுடைமை சமூகம்
- கம்யூனிச சமூகம்

**வினா இல : 47**

- அரசுகளுக்கிடையிலான முரண்பாடு
- அரசுக்குள்ளான முரண்பாடுகள்
- அரசு உருவாக்க முரண்பாடுகள் / அரச நிர்மான முரண்பாடுகள்

**வினா இல : 48**

- அதிகாரத்தை வரையறுத்தல்
- பொறுப்புடைமை மற்றும் நிபந்தனைகளுக்குட்படல்
- வரையறுக்கப்பட்ட ஆயுட்காலம்
- சட்டத்தின் ஆட்சி
- அதிகாரப் பகிர்வு
- அரசாங்கத்தின் அதிகாரத்தை சமநிலை தலையீடுகளுக்கு உட்படுத்தல்

- வெளிப்படைத்தன்மை
- நீதித்துறைச் சுதந்திரம்

**வினா இல : 49**

1. ஆளுநர்
2. அமைச்சரவை / முதலமைச்சர் உள்ளிட்ட அமைச்சரவை

**வினா இல : 50**

- 1947 சோல்பரி அரசியலமைப்பு / சோல்பரி அரசியலமைப்பு / 1947 அரசியலமைப்பு / 1947 / 1948 சோல்பரி அரசியலமைப்பு
- 1972 முதலாம் குடியரசு அரசியலமைப்பு / 1972 அரசியலமைப்பு / 1972

# அரசியல் விஞ்ஞானம் II

## பகுதி I

**வினா இலக்கம் 01 :**

**“அரசியல் என்பது ஒரு சமூகப் பயன்பாடாகும்” விளக்குக. (20 புள்ளிகள்)**

**நோக்கம்**

அரசியல் என்பது அரசு மற்றும் அரசாங்கத்துடன் மாத்திரம் வரையறுக்கப்பட்ட ஒன்றல்ல, மாறாக பிரஜைகள் துடிப்பாக பங்கேற்கும் ஒரு செயன்முறையாக காணப்படுகிறது என்பதை விளங்கிக் கொண்டு பிரஜைகளின் பங்குபற்றல் இன்றி அரசியல் காணப்படமாட்டாது என்பதனை பரீட்சார்த்திகள் முன்வைக்க வேண்டும். அத்துடன் அரசியலில் பிரஜைகளின் பயன்பாடு தொடர்பான மாணவர்களின் அறிவு மற்றும் தெளிவினை அளவிடுதல் இவ்வினாவின் நோக்கமாகும்.

**அறிமுகம் (03 புள்ளிகள்)**

மரபுரீதியாக அரசியல் என்பது அரசு மற்றும் அரசாங்கத்துடன் தொடர்புடையதொரு செயன்முறையாகவே புரிந்துகொள்ளப்பட்டுள்ளது. இந்த அணுகுமுறையானது அரசு மற்றும் அரசாங்கம் ஆகிய பரப்புகளுக்கு வெளியில் இடம்பெறும் அரசியலை, அரசியல் விஞ்ஞான பரப்புக்குள் கொண்டுவருவதற்கான வாய்ப்பினை வழங்கவில்லை. ஆகவே, அரசியலுக்கான தற்கால அணுகுமுறை வலியுறுத்துவது யாதெனில், அரசியல் செயற்பாடுகளுக்கு அரசு என்ற பரப்பு அல்லது அரசாங்கம் மிக முக்கியமாக காணப்படினும், அரசின் பரப் புக்கு வெளியிலும் அரசியல் இடம்பெறுகிறது என்பதாகும். இதன்படி அரசியல் என்பது அரச அதிகாரம் தொடர்பான போராட்டத்திற்கு மட்டுமன்றி சமூகத்தில் பல்வேறு முறைகளில் நடைபெறும் சமூக பயன்பாடு எனவும் குறிப்பிட முடியும்.

**கலந்துரையாடல் (14 புள்ளிகள்)**

- “அரசியல் என்பது ஒரு சமூகப் பயன்பாடு” என்ற கூற்றின் அர்த்தம் யாதெனில் அரசியல் என்பது தொழில்சார் அரசியல் வாதிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிகழ்வு அல்ல என்பதாகும். அது பொது மக்க ளாகிய பிரஜைகளின் நாளாந்த பயன்பாடாகும்.

- மேலேயுள்ள விளக்கத்தினை நோக்கும் போது பிரஜைகள் நாளாந்தம் அரசியல் செயன்முறையில் ஈடுபடு கின்றார்கள் என்பது தெளிவாகிறது. அவர்கள் தேர்தலில் வாக்களிக்கின்றார்கள், அரசியல் கட்சிகளில் இணைந்து அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர். எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் பங்குபற்றுகின்றார்கள். அத்தோடு தமது உறவினர்கள், அயலவர்களுடன் இணைந்து அரசியல் கலந்துரையாடல் செய்து அரசி யல் தொடர்பாடலிலும் ஈடுபடுகின்றனர். அரசியல் செய்திகளைப் பரிமாறுகின்றனர். இதன்மூலம் பிரஜை களுக்கிடையில் காணப்படும் அரசியல் தெளிவு மற்றும் அறிவு, அரசியல் விழிப்புணர்வு போன்றனவும் கட்டியெழுப்பப்படுகின்றது.

- சனநாயக சமூகத்தில் சமூகப் பயன்பாடு என்ற வகையில் பிரஜைகள் மேற்கொள்ளும் மிக முக்கியமான செயற்பாடு வாக்களித்தலாகும்.

- வாக்களித்தல் ஒரு சமூக செயற்பாடு. வாக்களித்தல் மூலம் பிரஜைகள் இரண்டு முக்கியமான அரசியல் பணிகளை மேற்கொள்கின்றார்கள். முதலாவது தம்மையும் தாம்சார்ந்த சமூகத்தையும் ஆள்வதற்கு ஓர் அரசாங்கத்தை தெரிவுசெய்கின்றார்கள். இரண்டாவது ஆட்சியாளர்களுக்கு தம்மையும் சமூகத்தையும் ஆள்வதற்கு அதிகாரத்தை வழங்குகின்றார்கள். முதலாவது பிரஜைகள் என்ற வகையில் தமக்குள்ள ‘ தெரிவு செய்யும் பணி’, இரண்டாவது ‘ அதிகாரமளிக்கும் பணி’ ஆகும்.

- அரசுடனான பிரஜைகளின் உறவானது எப்போதுமே மறைமுகமாகும். தொழில்சார் அரசியல் வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளுமே அரசுடன் நேரடி தொடர்புகளைப் பேணி வருகின்றனர்.

- அரசுக்கு வெளியில், சமூக மட்டத்தில் அரசியலை மேற்கொள்ளும் போதும் பிரஜைகள் அரசியலில் ஈடுபடுகின்றனர். இது சிவில் சமூக துறைசார்ந்த அரசியலாகும்.

- சிவில் சமூகம் என்பது பிரஜைகளின் சிறப்பான வாழ்க்கை, நலன் மற்றும் பொதுத் தேவைகளை அடைந்து கொள்வதற்காக சமூக அமைப்புகளை உருவாக்கிக் கொள்வதற்கான சமூக வாய்ப்பாகும். இவை நலன்பேன் அமைப்புகள், சமூக சேவை, பரஸ்பர உதவிக் கலாசாரம், சமயம், விளையாட்டு என வேறுபட்டு காணப்படுகின்றன.

- சிவில் சமூகங்களில் பிரஜைகள் துறைசார்ந்தும் கீழ் மட்டங்களிலும் அரசியலில் ஈடுபடுகின்றனர். இதன்மூலமே பிரஜைகள் செயலூக்கம் உள்ள பிரஜைகளாக மாறுகின்றனர். இச்சங்கங்களில் செயலூ க்கத்துடன் செயற்படுவதன் மூலம் பிரஜைகள் ஜனநாயகத்தை கற்கின்றார்கள். அந்த வகையில் கிராமிய மற்றும் கீழ் மட்ட சிவில் அமைப்புகள், ஜனநாயக பிரசைகளை பயிற்றுவிக்கும் களமாக செயற்படுகின்றன.

- அரசுக்கு வெளியில் சிவில் சமூகத்தில் நடைபெறும் பிரசைகள்சார் அரசியல் செயற்பாடு தொடர்பான உதாரணங்கள் பற்றியும் குறிப்பிட முடியும்.

முடிவுரை **(03 புள்ளிகள்)**

மேலுள்ள கலந்துரையாடல் தொடர்பான சுருக்கத்தினையும் அரசியல் என்பது அரசு, அரசாங்கம் மற்றும் அரச நிருவாகம் போன்ற துறையோடு அரச நிருவாகிகள் மற்றும் தொழில்சார் அரசியல்வாதிகளுக்கு மட்டும் வரையறுக்கப்படாது சமூகத்தின் பொது பிரஜைகளும் பங்குபற்றும் சமூக பயன்பாடாகும் என்ற முடிவுக்கு வரமுடியும்.

**வினா இலக்கம் 02 :**
**"அரசு சமூகத்தில் காணப்படும் அரச அதிகாரத்தின் மைய நிறுவனம் ஆகும்" ஆராய்க.**

**(20 புள்ளிகள் )**

**நோக்கம்**

இவ்வினாவானது அரசு தொடர்பான பரீட்சார்த்திகளின் புரிதலை, அரசியல் கோட்பாடுகள் என்ற நோக்கில் இருந்தும் அரசு பிரதான வகிபங்கினைக் கொள்ளும் சமூகத்தில் வாழும் பிரஜைகள் என்ற வகையிலும் தமது அனுபவம் மற்றும் அவதானிப்பு ஆகியவற்றின் மூலம் பெற்றுக்கொண்ட விடயங்களை ஆராய முற்படுகின்றது.

**அறிமுகம்** **(03 புள்ளிகள்)**

பரீட்சார்த்திகள் அரசு என்பது மானிட சமூகத்தில் காணப்படும் மிகப்பழைமையான நிறுவனம் என்பதனைக் குறிப்பிட்டு விடையினை ஆரம்பிக்க முடியும். அது அரசியல் கோட்பாடு பரிசீலனை மற்றும் தத்துவங்களில் பிரதானப் பேசு பொருளாகக் காணப்படுகின்றது. ஆயினும் ஏனைய சமூக நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது அரசு விசேடதன்மை கொண்ட நிறுவனமாகும். அது அரசியல் அதிகாரத்துடன் மிக நெருக்கமான தொடர்பு கொண்ட நிறுவனமாகும். எந்த ஒரு நவீன சமூகமும் அரசு ஒன்று இல்லாமல் காணப்பட முடியாது. அது அரசியல் அதிகாரத்தின் சின்னமாகவும் அதனை பிரயோகிக்கின்ற முக்கிய சமூக நிறுவனமாகவும் காணப்படுகின்றது.

இவ்வினாவுக்கான கலந்துரையாடல் இரு பகுதிகளைக் கொண்டு அமைய முடியும்.

(1) சமூக நிறுவனம் என்ற வகையில் அரசின் விசேடதன்மை என்ன?

(2) அரசியல் சிந்தனைகள் மற்றும் கோட்பாடுகள் அரசினை எவ்வாறு விளக்குகின்றன?

**கலந்துரையாடல்** **(14 புள்ளிகள்)**

1. அரசு தொடர்பான விசேட தன்மை யாது?
2. அரசியல் சிந்தனைகள் அல்லது கோட்பாடுகள் அரசை எவ்வாறு விளக்குகின்றது?

**1. அரசு தொடர்பான விசேட தன்மை யாது?**

- எல்லா சமூகங்களும், அங்கு வாழும் சமூகத்தை நிர்வகிப்பதற்காக அரசியல் நிறுவனங்களைக் கொ ண்டிருந்தமை. பாராளுமன்றம், அமைச்சரவை, பொதுத்துறை நிர்வாகம் மற்றும் பணியகவமைப்பு, பொலிஸ் மற்றும் பாதுகாப்பு படையினர், உள்ளூராட்சி நிறுவனங்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள் என்பவற்றை உதாரணமாக குறிப்பிடலாம்.

- மக்கள் ஆளுகையினை இலக்காகக் கொண்ட அரசின் பணிகளில் சட்டத்தை உருவாக்குதல் சட்டத்தை அமுலாக்குதல் நீதியை வழங்குதல் தீர்மானங்களை மேற்கொள்ளுதல் மற்றும் அமுலாக்குதல் பிரஜை களை கட்டுப்படுத்தல் பொருளாதாரத்தை முகாமை செய்தல் பிரஜைகளின் சிறப்பான வாழ்வு மற்றும் நலன் களை உறுதிசெய்தல் ஏனைய சமூகங்களுடன் அல்லது நாடுகளுடன் உறவினை பேணுதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

- சமூகத்தை ஆட்சிசெய்யும் மேற்குறிப்பிட்ட நிறுவனங்கள் மேற்கொள்ளும் பணிகளை அரசியல் விஞ்ஞான த்தில் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை, நீதித்துறை, பொதுநிர்வாகம், ஆட்சி நிறுவனங்கள் என குறிப்பி டலாம்.

- அரசாங்கத்தின் நிறுவனங்கள் சமூகத்தில் செயற்படும் போது அவை பெரும் நிறுவன கட்டமைப்பை கொண்டு செயற்படுகின்றன. அரசியல் விஞ்ஞானத்தில் அதனை “ அரசு” என அழைக்கின்றனர்.

- அவ்வாறாயின் அரசு என்றால் என்ன? ஆகவே இங்கு அரசு என்பது அரசாங்கத்தின் நிறுவனங்களையும் அது சார்ந்த கட்டமைப்புக்களையும் குறித்து நிற்கும் இறுதியான நிறுவனமே அரசாகும். இது அரசா-ங்கத்தின் அனைத்து நிறுவனங்களுக்கும் ஒட்டு மொத்த இருப்பாக காணப்படுகின்றது. சட்டத்துறை நிறைவேற்றுத்துறை நீதித்துறை மற்றும் பொதுத்துறை நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு படைகள் அரசின் அங்கங்களாக காணப்படுகின்றன.

அந்த வகையில் அரசு தொடர்பான முதலாவது கூற்று அல்லது அதன் விசேட தன்மையினை மேற்கூறி ய விடயங்கள் விளக்குகின்றன. “சமூகத்தின் அரசியல் அதிகாரத் தின் மைய நிறுவனம் அரசாகும்” என்ற கூற்றிற்கான முதலாவது விளக்கத்தை மேற்கூறிய விடயங்கள் வழங்குகின்றன.

- நாம் ஏற்கனவே கூறியது போன்று அரசாங்கத்தின் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிறுவனங்கள் காணப்படுகின்றன என வரையறுப்போமாயின் அவை தமது கடமைப் பொறுப்புக்களை முன்னெடுப்பதற்கு அதிகாரத்தை கொண்டிருக்க வேண்டும். அதிகாரம் இல்லாமல் இந்நிறுவனங்களால் செயற்பட முடியாது. காரணம் பிரஜைகள் அந்நிறுவனங்களை சட்ட பூர்வமான அதிகாரம் கொண்ட நிறுவனமாக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

- இங்கு குறிப்பிட்டு வலியுறுத்தப்பட வேண்டிய விடயம் யாதெனில் அந்நிறுவனங்கள் அரசிடம் இருந்தே அதி-காரத்தை பெற்றுக் கொள்கின்றன என்பதாகும். அவை சமூகத்தில் அதிகாரத்தினை கொண்டிருப்பதற்கு காரணம் (a) அவை அரசின் அங்கங்கள் (b) அவை அரசினது விருப்பத்தையும் திடசித்தத்தையும் வெ-ளிப்படுத்துகின்றன, இதன்படி, சமூகத்தின் அரசியல் அதிகாரத்தின் மைய நிறுவனம் அரசு என்பதற்கான இரண்டாவது விளக்கமே இதுவாகும்.

- அரசாங்கத்தின் இந்நிறுவனங்கள், அரசின் எந்த அதிகாரத்தை விசேடமாக சமூகத்தில் பிரயோகிக்கின்றன?, அத்தகைய அதிகாரத்துவத்திற்கு அரசியல் விஞ்ஞானத்தில் சொற்பதம் காணப்படுகின்றது. அதுவே இறைமை அதிகாரம் ஆகும். இறைமையானது சமூகத்தில் அரசுக்கு மாத்திரம் காணப்படும் மிக உயர்ந்த அதிகாரம் ஆகும், அதனை வேறு எந்த ஆட்சி நிறுவனமும் கோர முடியாது. ஜனநாயக கோட்பா-டுகளுக்கு இணங்க அது உண்மையில் மக்களின் அதிகாரம் ஆகும், அது உண்மையில் அரசிடம் கையளி-க்கப்பட்டுள்ளது. மக்களின் அதிகாரம் என்பது தம்மை தாமே ஆளுவதற்கு மக்களுக்கு உள்ள உரிமையினைக் குறித்து நிற்கின்றது.

- அரசின் இறைமை அதிகாரத்தை நாம் மேலே அடையாளம் கண்டுள்ளது போன்று ஆட்சி நடவடிக்கையும் அதன் பணியாகும். ஒவ்வொரு நிறுவனமும் அரசு தன்னகத்தே கொண்டுள்ள இறைமை அதிகாரத்தை பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட விடயத்தினை மாத்திரமே முன்னெடுக்கின்றது.

- மக்களின் இறைமை அதிகாரத்தை வெளிப்படுத்துகின்ற எல்லா பரிமாணங்களிலும் அரசே மிக உயர்ந்த நிறுவனமாக காணப்படுகின்றது. சமூகத்தில் அரசின் மேலாதிக்கத்தின் காரணமாகவே மக்கள் அரசுக்கு அடிபணிந்து அதனுடைய அதிகாரத்தை ஏற்றுக்கொள்கிறார்கள். பிரஜைகள் என்ற வகையில் எமது நாளாந்த வாழ்க்கையில் அரசின் விருப்பத்திற்கும் செயற்பாடுகளுக்கும் அடிப்பணிகின்றோம். நாம் அரசினை கேள்விக்கு உட்படுத்தாமல் ஏற்றுக்கொள்கின்றோம். நாம் அரசின் அதிகாரத்தை மறுத்-தால் அல்லது அதனுடைய சட்ட விதிகளை மீறினால் அரசு அதனுடைய விருப்பத்தையும் சட்டத்தையும் ஏற்றுக்கொள்ளச் செய்ய எம்மை நிர்ப்பந்திப்பதுடன் தண்டனையையும் வழங்கக்கூடும்.

- அந்தவகையில் பிரஜைகள் மற்றும் நிறுவனங்கள் மீதான அரசின் அதிகாரம் மற்றும் அதிகாரத்துவம் பரிபூரணமானதாகும்.

**2. அரசியல் சிந்தனைகள் அல்லது கோட்பாடுகள் அரசை எவ்வாறு விளக்குகின்றது.**

அரசுக்கு காணப்படும் இந்த விசேடதன்மை, அரசியல் கோட்பாடுகளில் பல்வேறு வகைகளில் விளக்கப்படுகின்றன. அவ்வெல்லா விளக்கங்களிலும் அரசு என்பது சமூகத்தில் காணப்படும் அரசியல் அதிகாரத்தின் மைய நிறுவனம் என குறிப்பிடப்படுகின்றது.

இவ்விடயம் தொடர்பில் அரசியல் சிந்தனை மற்றும் கோட்பாடுகளில் காணப்படும் ஆறு சம்பிரதாயங்களை இனங்காண முடியும்.

1. அரிஸ்டோட்டில் மரபு :- கிரேக்க சிந்தனையாளரான அரிஸ்டோட்டில் தனது புகழ்பெற்ற 'அரசியல்' எனும் நூலில் அரசு என்பது மானிட சங்கம் எனவும் அது சமூகத்தில் காணப்படும் சகல மானிட சங்கங்களையும் விட பெரிதும் மேலானதும் என குறிப்பிடுகின்றார். அரிஸ்டோட்டில் அரசுக்கு இத்தகைய விசேட அந்தஸ்த்-தினை வழங்கியமைக்கு காரணம், அது சமூகத்தில் வாழும் சகல பிரஜைகளினதும் சிறப்பான வாழ்க்கை மற்றும் நலனில் அக்கறைக் கொள்கின்றது என்பதனால் ஆகும்.

2. பண்டைய இந்திய சிந்தனையாளரான கௌடில்யர் இவ்வினாவிற்கு சிறந்த விளக்கத்தினை வழங்கி யுள்ளார். சட்டத்தினை மீறுவோருக்கு மற்றும் குற்றம் புரிவோருக்கு தண்டனை வழங்குவதற்கு ஆட்சி யாளருக்கு உள்ள அல்லது அரசுக்குள்ள அதிகாரமே என அவரின் புகழ்பெற்ற நூலான அர்த்தசாஸ்த்திர-த்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அரசுக்குள்ள மிகச்சிறப்பான அவ் அதிகாரத்தை (தண்ட), தண்டனை என விபரிக்கின்றார்.

3. இதற்கான மூன்றாவது பதிலை தோமஸ் ஹொப்ஸ் சமூக ஒப்பந்த கோட்பாட்டின் மூலம் முன்வைக்கி-ன்றார். மனிதர்கள் அரசினை உருவாக்கியதும், அரச அதிகாரத்தை ஏற்றுக் கொ ண்டதும், அதற்கு அடி பணிந்ததும், தமக்கு தேவையான பாதுகாப்பினையும் அரவணைப்பினையும் அரசின் மூலம் மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும் என்பதனாலாகும். அரசற்ற இடத்தில் குழப்ப நிலையே காணப்படும். அதாவது வன்முறை, குழப்பங்கள், சுய நலன் மற்றும் சட்ட மீறல்கள் இடம்பெறும். இதற்கு பதிலாக தனியாள் பாதுக-ாப்பு மற்றும் சமூக ஒற்றுமையினை ஏற்படுத்துவது அரசாகும்.

4. தாராளவாத மரபுடன் தொடர்புடைய ஜோன் லொக்கின் கற்பித்தல்கள் இவ்வினாவிற்கு வேறுபட்ட விடை யினை வழங்குகின்றது. அதன்படி அரசு மக்களின் இறைமை அதிகாரத்தை பிரயோகிக்கின்றது. அது ஒரு உடன்படிக்கையின் ஊடாக மக்களின் பிரதிநிதியாகக் காணப்படுகின்றது. அல்லது சமூக ஒப்பந்தத்-தின் மூலம் மக்களின் முகவராக செயற்படுகிறது. அந்த வகையில் அரசு மக்களின் சம்மதத்தினைக் கொண்டு செயற்படுகின்றது. காரணம் அரசு பிரஜைகளின் உயிர் மற்றும் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான அர்ப்பணிப்பினைக் கொண்டுள்ளது.

5. கார்ல் மார்க்ஸ் மற்றும் மார்க்ஸிய அரசியல் கோட்பாடு இவ்வினாவிற்கு பிறிதொரு விடையினை வழங்குகி ன்றது. அதன்படி அரசின் விசித்திரமான பண்பு யாதெனில் அது சமூகத்தில் காணப்படும் பொருளாதார பலத்தைக்கொண்ட ஆளும் வர்க்கத்தின் கருவியாகும். அது சமூகத்தில் தாழ்ந்த நிலையில் காணப்படும் உறுப்பினரை தனது அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளச் செய்ய நிர்பந்த அதிகாரத்தை பிரயோகிக்கும். லிபரல்வாதிகள் குறிப்பிட்டபடி பிரஜைகள் அரச அதிகாரத்திற்கு அடிபணிவது தமது விருப்பத்தின் பேரில் அன்றி விருப்பின்றியே ஆகும். அரச அதிகாரம் சமூகம் முழுவதும் அடக்குமுறை மற்றும் பலாத்காரமான-தாக காணப்படுகி ன்றது.

6. ஜேர்மனிய சமூகவியலாளர் மெக்ஸ் வெபர் மார்க்ஸின் கோட்பாட்டு தளத்தில் இருந்து தனது வாதத்தினை முன்வைத்துள்ளார். இவர் அரசிடம் காணப்படும் விசேடம் யாதெனில் சமூகத்தினுள் வன்முறை, பலாத் கார அதிகாரம் என்பவற்றை வெளிப்படையாகப் பயன்படுத்தும் தன்னிகரற்ற தன்மை தனக்குள்ளது என் பதாகும். அது ஏனைய சமூக நிறுவனங்களுக்கு இல்லாத பண்பாகும் என வெபர் சுட்டிக்காட்டினார். தமது அதிகார பலத் தினை நடைமுறைப்படுத்தும்போது அரச எல்லைக்குள் இருக்கும் எந்த நிறுவனத்திற்கும் இவ்வதிகாரம் காணப்படவில்லை.

**முடிவுரை** **(03 புள்ளிகள்)**

நாம் மேலே அவதானித்தது போல அரசும் சமூகத்தில் காணப்படும் ஒரு மானிட சங்கமாகும். ஆயினும் அவற்றுக்கெல்லாம் மேலானது. அது தனது ஆள்புலத்தினுள் வாழும் ஒவ்வொருவரும் அதனுடைய அதிகாரத்தை ஏற்று அடிப்பணிய வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அவ்வாறான அடிபணிவொன்று உண்மையில் நடைபெறுகின்றது. தன்னிடம் காணப்படும் தேவைகளை உறுதிசெய்ய, தேவையான அதிகாரம், சட்டதிட்டங்கள், நிறுவனங்கள் மற்றும் ஆளணியினரை அரசு கொண்டுள்ளது. அரசின் இவ்வதிகாரம் சமூகத்தினுள் ஒழுங்கமைந்திருக்கும் அரசியல் அதிகாரமாகும். இவ்வாறு அரசு என்பது சமூகத்தில் காணப்படும் அரசியல் அதிகாரத்தின் மைய நிறுவனமாகும்.

## வினா இலக்கம் 03 :

**மந்திரி சபை அரசாங்க முறை மற்றும் ஜனாதிபதித்துவ அரசாங்க முறையை ஒப்பிடுக.**

**(20 புள்ளிகள் )**

**நோக்கம்**

நிறைவேற்றுத்துறை அதிகாரம் செயற்படுத்துகின்ற விதத்தினை அடிப்படையாகக் கொண்டு இவ் வேறுபாடு அமைந்துள்ளது. மந்திரி சபை மற்றும் ஜனாதிபதித்துவ அரசாங்க முறை தொடர்பான இயல்புகள் மற்றும் பண்புகள், அதன் குறை நிறைகள் தொடர்பில் பரீட்சார்த்திகள் கொண்டிருக்கும் ஒப்பீட்டு அறிவு மற்றும் தெளிவுகளை மதிப்பிடுவதே இவ்வினாவின் நோக்கமாகும்.

**அறிமுகம்** **(03 புள்ளிகள்)**

மந்திரி சபை மற்றும் ஜனாதிபதித்துவ அரசாங்க முறையானது உலகில் புகழ்பெற்ற அரசாங்க முறைகளாக காணப்படுகின்றன. மந்திரி சபை அரசாங்க முறையில் நிறைவேற்று அதிகாரமானது பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையால் தலைமை தாங்கப்படும் முறையாகக் காணப்படும்.
உதாரணம் பிரித்தானிய மற்றும் இந்திய முறைகள்

ஜனாதிபதித்துவ அரசாங்க முறையில் நிறைவேற்று அதிகாரமானது ஜனாதிபதியினை சூழ்ந்து காணப்படும்.
உதாரணம் : ஐக்கிய அமெரிக்க குடியரசு

கபினற் அரசாங்க முறை பாராளுமன்ற சம்பிரதாயங்களைப் பின்பற்றும் ஓரு முறையாகும். இதற்கான சிறந்த உதாரணம் பிரித்தானியாவாகும்.

**கலந்துரையாடல்** **(14 புள்ளிகள்)**

பின்வருவன ஜனாதிபதித்துவ மற்றும் மந்திரி சபை அரசாங்க முறை தொடர்பான ஒப்பீடுகளின் சுருக்கமாகும்.

- மந்திரிசபை அரசாங்க முறையொன்றில், நிறைவேற்றுத்துறை இரட்டைத் தன்மையினைக் கொண்டிருப்பதோடு இது சனாதிபதிமுறையில் ஒற்றைத் தன்மையினைப் பெறுகின்றது. கபினற் அரசாங்க முறையில் நாமநிர்வாகியாக முடி அல்லது சனாதிபதி இருப்பதோடு உண்மை நிருவாகியாக பிரதமர் காணப்படுவார். பிரதமர் அரசியல் நிருவாகத்தின் தலைவராவார். சனாதிபதி முறையில் நாம மற்றும் உண்மை நிருவாகம் என பிரிக்கப்பட்டிருக்கவில்லை. சனாதிபதியே இவையிரண்டுக்குமான ஒரே தலைவராவார்.

- மந்திரி சபை அரசாங்க முறையில் நிறைவேற்றுத்துறையானது சட்டத்துறையில் இருந்து தெரிவு செய்யப்படுவதோடு சனாதிபதி முறையில் அது சட்டத்துறைக்கு அப்பால் தனியானதொரு ஜனாதிபதி தேர்தலில் தெரிவு செய்யப்படுகின்றது.

- கபினற் அரசியலமைப்புகள் பொதுவில் பாராளுமன்ற முறையிலேயே காணப்படும்.

- மந்திரி சபை அரசாங்க முறையில், நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்கு கூட்டாக பொறுப்பு சொல்ல வேண்டும். ஜனாதிபதித்துவ அரசாங்க முறையில் ஜனாதிபதி மற்றும் நிறைவேற்றுத்துறை ஆகியன சட்ட சபைக்கு நேரடியாக பொறுப்புடையவை அல்ல என்பதோடு நேரடியாக மக்களுக்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும். சனாதிபதிமுறையில் இவர் மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்படுவதோடு அதனால் பொது மக்களுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டும். இது குடியரசுவாத மூலக்கொள்கைக்கு ஏற்றதாகும்.

- ஜனாதிபதித்துவ அரசாங்க முறையில் ஜனாதிபதியின் பதவிக்காலமும் சட்டசபையின் பதவிக்காலமும் ஒரே நேரத்தில் முடிவுக்கு வருவதில்லை. எனினும், மந்திரி சபை அரசாங்க முறையில் நிறைவேற்றுத்துறை யினதும் சட்டத்துறையினதும் பதவிக்காலம் ஒரே நேரத்தில் முடிவுக்கு வரும்.

- மந்திரி சபை அரசாங்க முறையொன்றில் நிறைவேற்றுத்துறையினை கட்சி அரசியல் காரணங்களுக்காக பதவியில் இருந்து நீக்க முடியும்.
  உதாரணமாக அரசாங்கத்தின் கொள்கை விளக்க உரை அல்லது சிம்மாசன பிரசங்க உரை அல்லது வரவு செலவு திட்டம் சட்டசபையில் தோற்கடிக்கப்படுமாயின் அமைச்சரவை மற்றும் பிரதமர் பதவி விலக வேண்டும். அதேவேளை, சட்டசபையில் ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு சாதாரண பெரும்பான்மையால் நிறைவேற்றப்படுமாயின் அரசியல் நிர்வாகம் பதவி விலக வேண்டும்.

- எனினும் ஜனாதிபதித்துவ முறையொன்றில் சட்ட சபையில் குற்றப்பிரேரணை ஒன்றினைக் கொண்டு வந்து மிகவும் கடினமான வழிமுறைகளின் ஊடாகவே ஜனாதிபதியை பதவி நீக்க முடியும்.

- ஜனாதிபதித்துவ முறையினை, மந்திரி சபை அரசாங்க முறையுடன் ஒப்பிடும் போது பெரியளவிலான அரசியல் ஸ்திரத்தன்மையொன்று காணப்படுகின்றது.

- மந்திரி சபை அரசாங்க முறை ஜனநாயக தன்மை வாய்ந்தது. ஜனாதிபதித்துவ முறை சில சமயங்களில் சர்வதிகார ஆட்சி ஏற்பட வழிசெய்யும்.

- ஜனாதிபதித்துவ அரசாங்க முறையில், நிறைவேற்றுத்துறை சட்டத்துறையில் தங்கியிருக்காது தனியான இருப்பினைக் கொண்டிருப்பதால் அரசாங்கம் பெரிதும் வினைத்திறன் மிக்கதாக அமையும். மறுபுறமாக, மந்திரி சபை அரசாங்க முறையில் நிறைவேற்றுத்துறை சட்டத்துறையில் தங்கியிருப்பதும் அதனால் அரசியல் ஸ்த்திரத்தன்மையற்று காணப்படுவதும் தொடர்ந்தும் விமர்சனத்திற்குள்ளாகும் ஒன்றாகக் காணப்படுகின்றது.

- மந்திரி சபை அரசாங்க முறையில், சட்டத்துறை அல்லது பாராளுமன்றம் மீயுயர் நிறுவனமாகக் காணப்படும். ஆனால் ஜனாதிபதித்துவ முறையில் அவ்வாறு காணப்படுவதில்லை.

- ஜனாதிபதித்துவ அரசாங்க முறையில் நிறைவேற்றுத்துறைக்கும் சட்டத்துறைக்குமிடையிலான முரண்பாடுகளுக்கு வாய்ப்பு காணப்படுகின்றது. இது மந்திரி சபை அரசாங்க முறையில் பொதுவில் இடம்பெறுவதில்லை.

- ஜனாதிபதித்துவ அரசாங்க முறையில், ஜனாதிபதி அமைச்சரவையினதும் அரசாங்கத்தினதும் தலைவ ராக இருப்பதுடன், அரசின் தலைவராகவும் காணப்படுவார். மந்திரி சபை அரசாங்க முறையில் அவ்வாறு அல்ல. அங்கு பிரதமர் அரசின் தலைவராக அல்லாமல் அரசாங்கத்தின் தலைவராகவும் காணப்படுவார்.

- சனாதிபதி அரசாங்க முறையில் அதிகார வேறாக்கக் கொள்கை பின்பற்றப்படுவதோடு கபினற் முறையில் இக்கொள்கை பின்பற்றப்படுவதில்லை.

- மந்திரி சபை அரசாங்க முறைக்கு கட்சிமுறை செயற்பாடு அவசியமாகும். மறுபுறமாக ஜனாதிபதித்–துவ அரசாங்கம், போட்டித்தன்மை கொண்ட கட்சிமுறையொன்று செயற்பாட்டில் இல்லாத நிலமையிலும் இருப்புக்கொள்ளும்.

- மந்திரி சபை அரசாங்க முறையில் நிறைவேற்று அதிகாரம் அரசியல் ரீதியாக முதிர்ச்சி பெற்ற தொழில்சார் அரசியல்வாதிகளால் பிரயோகிக்கப்படும். ஜனாதிபதித்துவ அரசாங்க முறையில் அவ்வாறு காணப்படு வதில்லை.

**முடிவுரை** **(03 புள்ளிகள்)**

மந்திரி சபை மற்றும் ஜனாதிபதித்துவ அரசாங்க முறையின் வகைப்பாடானது ஒப்பீட்டு அரசியலின் பிரதான கருப்பொருளாகும். இங்கு கலந்துரையாடப்பட்டிருக்கும் ஜனாதிபதித்துவ மற்றும் மந்திரி சபை அரசாங்க முறையின் பண்புகளானவை இரண்டினதும் தூய மாதிரிகளை அடிப்படையாக கொண்டதாகும். இவை கலப்பு நிர்வாக முறையினைக் கொண்ட சூழல்களில் வேறுபடலாம். இலங்கையினுடைய தற்போதைய அரசியல் முறை இதுபோன்றதாகும்.

## வினா இலக்கம் 04 :

**இலங்கையில் காலனித்துவ நிலைமாற்றத்தினால் ஏற்பட்ட அரசியல் விளைவுகளை ஆராய்க.**

**(20 புள்ளிகள்)**

**நோக்கம்**

காலனித்துவ இலங்கையின் அரசியல் மறுசீரமைப்பு மற்றும் பரிமாற்றங்களுக்கு ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர்கள் தாக்கம் செலுத்திய விதம் குறித்து பரீட்சார்த்தியின் அறிவு மற்றும் தெளிவினை மதிப்பிடுவது இவ்வினாவின் நோக்கமாகும். பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் அவதானம் செலுத்துவதுடன் முன்னர் காணப்பட்ட அரசியல் சீர்திருத்தங்கள் ஏற்படுத்திய விளைவுகள் குறித்தும் விடையில் கலந்துரையாடுவது அவசியமாகும்.

**அறிமுகம்** **(03 புள்ளிகள்)**

இலங்கையில் போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் ஆட்சியின் ஆரம்ப காலத்தினைக் குறிப்பிட்டு விடையினை ஆரம்பிக்க முடியும். இலங்கை சமூகத்திற்கு நமது முன்னோர்கள் மேற் கொண்டதிலும் பார்க்க பாரிய மாற்றங்களை மேற்கொள்வதற்கு பிரித்தானிய காலனித்துவ ஆட்சி யாளர்கள் முனைந்தனர். காலனித்துவ ஆட்சியில் புதிய அரசினை தாபிப்பதற்கு காலனித்துவ ஆட்சியாளர்கள் முனைந்தனர். பொருளாதார, சமூக கலாசார மற்றும் நிர்வாகத் துறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தினர். மாற்றங்களின் நோக்கம் நாடு முழுவதும் காலனித்துவத்தின் கீழ் கொண்டு வருவதாக இருந்தது.

**கலந்துரையாடல்** **(14 புள்ளிகள்)**

- காலனித்துவ ஆட்சியில் காலனித்துவத்திற்கு உட்பட்ட சமூகத்தின் பொருளாதார அரசியல் மற்றும் மக்களின் வாழ்க்கை போன்ற எல்லா துறைகளிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு அரசியல் மாற்றம் ஏற்படுத்தப்பட்டது.

- காலனித்துவ ஆட்சியாளர்கள் முதலில் செய்வது யாதெனில் யுத்தத்தின் மூலம் கைப்பற்றும் காலனித்து வத்தில் இராணுவ எதேச்சதிகாரம் ஒன்றுக்கு சமமான ஆட்சிமுறையினை உருவாக்குவர். அதன் பின்னரே மறுசீரமைப்புகளை முன்வைப்பர். பொதுவாக இவ்வாறான மறுசீரமைப்பு வெளிப்படுவது தமது தாய் நாட்டின் அரசியல் முறை யிலாகும். பிரித்தானிய காலனித்துவத்தினால் இலங்கையில் அறிமுகப்படு த்தப்பட்ட அரசியல் மற்றும் நிர்வாக மறுசீரமைப்புக்கு பிரித்தானியாவின் ஆதரவு கிடைத்தது.

**அரசியல் விளைவுகள்**

- அரசியல் துறையின் மறுசீரமைப்புகள் 1833 கோல்புறூக்–கமரூன் சீர்திருத்தத்தினால் ஆரம்பமானது. இச்சீர்த்திருத்தத்தினால் பின்னாளில் அதிகாரத்தை ஓரிடத்தில் மத்திய மயப்படுத்தப்பட்ட ஒற்றை யாட்சி அரசுக்குத் தேவையான அடிப்படையை வழங்கியது.

- இலங்கையில் யாப்புசார் மற்றும் பொறுப்புக்கூறலுடன் தொடர்புடைய அரசியலமைப்பிற்கான அடிப் படையினையும் இச்சீர்த்திருத்தம் வழங்கியது.

- ஆளுநரின் எல்லையற்ற ஆட்சியதிகாரத்தை வரையறுத்து சட்டவாக்கச் சபை ஒன்றினை உருவாக் கியமை பின்னாளில் பாராளுமன்றம் மற்றும் பிரதிநிதித்துவ அரசாங்கத்திற்கான ஆரம்பமாக அமைந்தது.

- 1910இல் குறு – மக்கலம் சீர்திருத்தத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் சீர்திருத்தத்தின் மூலம் வரையறுக்கப்பட் வாக்குரிமையினை அடிப்படையாகக் கொண்ட பிரதிநிதித்துவ அரசாங்க மாதிரிக்கான ஆரம்பம் இடப்பட்டது.

- பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறையினை மெனிங் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தியது. 1920 ஆகும் போது பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறையானது மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு மாகாண ரீதியான பிரதிநிதித்துவத்திற்கு வழி கோலியது. அதே காலப்பகுதியில் நிலவிய இனவாரிப் பிரதிநிதித்துவம் பிற்காலத்தில் இலங்கையின் தேர்தல் அரசியலில் விவாத த்திற்குரிய ஒன்றாக மாறியது. அதன் காரணமாக பெரிதும் விமர்சனத்திற்குள்ளான இனவாரி பிரதிநிதித்துவத்திற்குப் பதிலாக பிரதேசவாரி பிரதிநிதித்துவமே பின்பற்றப்பட்டது.

- இப்பிரதிநிதித்துவத்தின் மாற்றங்கள் 1931 டொனமூர் சீர்திருத்தத்தின் மூலம் முன்னிலை பெற்றது.

- வாக்குரிமை பொதுமக்களுக்கு விரிவுபடுத்தப்பட்டதோடு பிரதிநிதித்துவத்தினை அடிப்படையாகக் கொண்ட சட்டத்துறை, அரசியல் அதிகாரம், சொத்து, சமூக அந்தஸ்து அற்ற சாதாரண மக்களிடத்தே சென்றடைந்தது. 1931இல் காலனித்துவத்தில் நிலைமாற்றத்தால் ஏற்பட்ட ஜனநாயக பிரசைகளை உருவாக்கும் மாற்றம் இதுவாகும்.

- சர்வசன வாக்குரிமையினை அடிப்படையாகக் கொண்ட தேர்தல் முறை மற்றும் சட்டவாக்கத் துறையின் காரணமாக அரசியல் உயர்குழாமினருக்கு பொதுமக்களிடம் தங்கயிருக்க வேண்டிய தேவை உருவானது.

- நிறைவேற்றுக் குழுமுறையின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட அமைச்சரவை பின்நாளில் இலங்கையில் கபினற் அரசாங்க முறைக்கான அடிப்படையாக அமைந்தது.

- இருபதாம் நூற்றாண்டின் முன்னரைப் பகுதியில் காலனித்துவ இலங்கையில் சமூக அரசியல் துறைகளில் ஏற்பட்ட குறைந்தபட்ச சனநாயகப்படுத்தல் பின்புலத்தினுள் சிவில் சமூக இயக்கங்கள் தோற்றம் பெற்றன. தொழிற் சங்கம், பெண்கள் அமைப்பு, இனவாத மற்றும் மதவாத அமைப்புகள், அரசியல் சங்கங்கள், பத்திரிகை மற்றும் நூல்களின் விருத்தி, இலங்கையில் காலனித்துவத்தில் தோற்றம் பெற்ற சிவில் சமூகம் என்பன இதன் முக்கிய அடையாளங்களாகும்.

**முடிவுரை** **(03 புள்ளிகள்)**

மேற்குறிப்பிட்ட கலந்துரையாடலை சாரம்சப்படுத்தி முடிவுரையினை ஆரம்பிக்க முடியும். இதன்போது கீழ்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட முடியும்.

1. இலங்கையினை அரசியல் மற்றும் நிர்வாக ரீதியாக ஒன்றிணைத்தல்.
2. மத்தியமயப்படுத்தப்பட்ட அரச கட்டமைப்பிற்கான அடிப்படையினை வழங்கியமை.
3. அரசியல் முறைமை மற்றும் சமூக முறைமை சனநாயகப்படுத்தலுக்கு உட்படல்.
4. நவீன சனநாயகத்திற்கான அடிப்படை இடப்படல்
5. இனரீதியான அரசியலுக்கான ஆரம்பம்
6. அரசியல் முறைமை திறந்துவிடப்படல் மற்றும் சிவில் சமூகத்தின் எழுச்சி

**வினா இலக்கம் 05 :**

**சோல்பரி அரசியல் யாப்புடன் தொடர்புடைய பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டினை ஆராய்க.**

**(i) அரசியல் யாப்பிற்கு எதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள்**

**(ii) நிறைவேற்றுத்துறையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

**(iii) சட்டத்துறையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

**(10 × 2 = 20 புள்ளிகள்)**

**நோக்கம்**

இவ்விடையானது சோல்பரி அரசியலமைப்பு தொடர்பாகவும் அதன் மீதான விமர்சனங்கள் தொடர்பாகவும் பரீட்சார்த்திகள் கொண்டிருக்கும் அறிவு மற்றும் புரிந்துணர்வுகளை மதிப்பிடுவதனை நோக்கமாக கொண்டமைந்துள்ளது. இவ்வினாவிற்கான விடையினை வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரியிலான ஆட்சி முறைக்கோணத்தில் இருந்து பரீட்சார்த்திகள் நோக்க முடியும் என்பதுடன், சோல்பரி சட்டசபை சட்டங்களை உருவாக்குதல் மற்றும் இல்லாது செய்வதில் கொண்டிருந்த கட்டுப்பாடுகள் தொடர்பான விடயங்களையும் முன்வைக்க வேண்டும். அத்துடன் பரீட்சார்த்திகள் சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறை தொடர்பான விடயங்களையும் அவற்றின் அதிகாரம் கடமைகள் தொடர்பான மட்டுப்பாடுகள் தொடர்பான விமர்சன ரீதியான மதிப்பீட்டினையும் வழங்க வேண்டும்.

**(i) அரசியல் யாப்பிற்கு எதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள்** **(10 புள்ளிகள்)**

**நோக்கம்**

பரீட்சார்த்திகள் சோல்பரி அரசியல் யாப்பு தொடர்பாக கொண்டிருக்கும் ஒட்டுமொத்த பார்வை மற்றும் அதற்கு எதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங்கள் தொடர்பான அறிவினை மதிப்பிட முற்படுகிறது.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

சோல்பரி அரசியல் அமைப்பு பிரித்தானிய வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரியினை தழுவிய பாராளுமன்ற அரசாங்க முறையொன்றினை அறிமுகம் செய்தது. இது அரசியல் நிறைவேற்றுத் துறைக்கு பிரதமர்

தலைமை தாங்கும் ஆட்சி முறையாகக் காணப்பட்டது. இது நவீன தாராள ஜனநாயக சட்டகம் ஒன்றினைக் கொண்டிருந்ததோடு இலங்கையினுடைய தேசியவாதிகளினதும் இடதுசாரிகளினதும் அதிகளவிலான விமர் சனத்திற்கு உள்ளாகியது.

**கலந்துரையாடல் (06 புள்ளிகள்)**

- சோல்பரி அரசியல் அமைப்பு மீது முன்வைக்கப்பட்ட பிரதான விமர்சனம் யாதெனில் அது பூரண சுதந்திரத்தை வழங்கவில்லை. மாறாக இலங்கைக்கு டொமினியன் அந்தஸ்த்தினை வழங்கியது. இதனால் உண்மையான அதிகாரம் தொடர்ந்தும் பிரித்தானியரிடமே காணப்பட்டதாகவும் அதனால் நாட்டின் பொருளாதாரம், சமூக, அரசியல் மற்றும் அரசிலமைப்புக் கட்டமைப்புகள் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பாக அழுத்தம் கொடுக்க அவர்களால் முடிந்ததாக விமர்சனம் முன்வைக்கப்பட்டது.

- உதாரணமாக பிரித்தானியர் சுதந்திரத்தினை வழங்கும்போது அரச சேவையின் பாதுகாப்பு மற்றும் வெளி நாட்டு நடவடிக்கைகள் குறித்த 3 உடன்படிக்கைகளை கைச்சாத்திட்டதோடு, அதன்மூலம் அக்குறித்த துறைகள் மீது சட்டம் இயற்றுவதற்கான பூரண அதிகாரம் இலங்கை பாராளுமன்றத்திற்கு கிடைக்கவில்லை. பிரித்தானிய முடி தொடர்ந்தும் இலங்கை அரசின் தலைவராக காணப்பட்டமையானது பாரிய விமர்சனத்திற்கு உள்ளாகியது. இவ்விடயம் காரணமாக இலங்கை காலனித்துவத்தில் இருந்து பூரணமாக விடுபடவில்லை என்ற வாதம் முன்வைக்கப்பட்டது.

- தொடர்ந்தும் இலங்கையின் சமூக, அரசியல், பொருளாதார மற்றும் ஆட்சி முறை கட்டமைப்புகளில் பிரித்தானிய ஆட்சியாளர்கள் தமது அதிகாரத்தையும் செல்வாக்கையும் தக்கவைத்துக் கொண்டார்கள் என பெரிதும் விமர்சிக்கப்பட்டது. பிரித்தானிய ஆட்சியில் இருந்து தெளிவான பிரிவினையை இலங்கை பெற்றுக்கொள்ளவில்லை என சிலர் விமர்சித்தனர். இது பிரித்தானியருக்கு எதிரான உணர்வினை மேலும் அதிகரித்தது. அத்துடன் சோல்பரி அரசியல் அமைப்பு இலங்கைக்கு பூரண சுதந்திரத்தை வழங்கவில்லை என்ற எண்ணத்தையும் பரவலாகவே ஏற்படுத்தியது.

- இதனால் காலனித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிரான கருத்துநிலை மேலும் விருத்தியடைந்தது. அதனால் சோல்பரி இலங்கையருக்கு பூரணமான சுதந்திரத்தை வழங்கவில்லை எனும் கருத்து பரவலடைந்தது.

- சோல்பரி அரசியலமைப்பினால் அறிமுகப்படுத்தப்பட்ட அரசியல் அமைப்பு, சட்டங்கள், மற்றும் சம்பிரதாயங்கள் முழுமையாக பிரித்தானிய சட்ட, அரசியல் மற்றும் ஒழுக்க நியமங்களுக்கு ஏற்பவே காணப்பட்டது. அது ஒற்றையாட்சிக் கட்டமைப்பினை அரசிற்கு வழங்கியது. அது தமிழ் சமூகத்தின் அதிருப்தியை ஏற்படுத்தியது.

- பாராளுமன்றம் சட்ட உருவாக்கத்தில் பூரண இறைமை அதிகாரத்தை கொண்டிருக்கவில்லை. சட்ட வாக்க அதிகாரம் பல்வேறு வழிமுறைகள் ஊடாக குறிப்பிடத்தக்க அளவுக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. உதாரணமாக பிரித்தானிய நலன்களை பாதுகாக்கும் வகையில் பிரித்தானிய பாராளுமன்றத்தின் ஊடாக இலங்கைக்கான எந்தவொரு சட்டத்தையும் உருவாக்கும் அதிகாரத்தை முடி கொண்டிருந்தார். இலங்கை பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டம் ஒன்றினை தடுக்கும் ஆற்றலும் முடிக்கு காணப்பட்டது. இவ்வதிகாரம் முடியின் பிரதிநிதி மகாதேசாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்தது. இலங்கை பாராளுமன்றத்தில் உருவாக் கப்பட்ட சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதை தடுப்பதற்கான அதிகாரம் மகாதேசாதிபதிக்கு இருந்தது (36ஆம் உறுப்புரை).

- அரசியலமைப்பின் உறுப்புரை 29 (1), (2), (3) ஆகியன பாராளுமன்ற சட்டவாக்க அதிகாரத்தின் மீது பெரியளவிலான கட்டுப்பாடுகளை விதித்தது.

- அதேவேளை இக்காலத்தில் இறுதி மேன்முறையீடுகளை செய்யும் அல்லது நீதித்துறை சார்ந்த தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் பிரித்தானிய பிரிவி கவுன்சிலிடம் காணப்பட்டது. அது பெரும்பான்மை இனத்தவர்களினதும் தேசிய வாதிகளினதும் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியது.

- சோல்பரி அரசியல் அமைப்பின் கீழ் தாபிக்கப்பட்ட செனட் சபையானது பெரும் விமர்சனத்திற்கு உள்ளா-னது. மக்கள் பிரதிநிதிகள் சபையால் நிறைவேற்றப்படுகின்ற சட்டங்களை செனற் சபை காலந் தாழ்த்து வதானது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளின் விமர்சனத்திற்கு உள்ளாகியதுடன் அதனை ஒரு தடையாகவும் அவர்கள் நோக்கினார்கள்.

- அரச கொள்கை வழிகாட்டல் அத்தியாயம், அடிப்படை உரிமைகள் அத்தியாயம் காணப்படாமை.

- சிங்கள தேசிய வாதிகளும், இடதுசாரி கட்சிகளும் பிரித்தானிய காலனித்துவ ஆட்சியாளர்கள் காலனித்துவ-த்தை தொடர்ந்தும் தக்கவைக்கும் நோக்கில் தமக்கு இறைமையற்ற பாராளுமன்றத்தை திணித்துள்ளார்கள் என விமர்சித்தனர்.

- தமிழ்த் தலைவர்களால் முன்வைக்கப்பட்ட சம்பிரதிநிதித்துவம் ( 50:50 ) என்ற கோரிக்கையும் சோல்பரி ஆணைக்குழுவால் நிராகரிக்கப்பட்டது. இதன் விளைவாக சோல்பரி அரசியல் அமைப்பு தமிழ் மக்களின் கடும் விமர்சனத்திற்கு உள்ளாகியது.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

சோல்பரி அரசியல் அமைப்பு இலங்கையினுடைய காலனித்துவ ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து ஜனநாயக அரசாங்க முறையை தாபித்திருந்தாலும் கூட அது பல வழிகளிலும் விமர்சனத்திற்கு உள்ளாகி யது. இதில் பிரதான விமர்சனம் யாதெனில் இலங்கைக்கு பூரண அரசியல் சுதந்திரம் வழங்கப்படாமையா-கும். இத்தகைய பின்புலத்திலேயே 1972ஆம் ஆண்டு சோல்பரி அரசியல் அமைப்பு இல்லாதுஒழிக்கப்பட்டு முதலாம் குடியரசு யாப்பு உருவாக்கப்பட்டது.

## (ii) நிறைவேற்றுத்துறையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் (10 புள்ளிகள்)

**நோக்கம்**

இத்தலைப்பானது சோல்பரி அரசியல் அமைப்பின் கீழான நிறைவேற்றுத்துறையின் கட்டமைப்பு, அதிகாரங்கள் மற்றும் வகிபங்கு தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவினை மதிப்பிட முற்படுகிறது.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

- பரீட்சார்த்திகள், சோல்பரி அரசியல் அமைப்பு இரு வகையான நிறைவேற்றுத்துறையினைக் கொண்டிருந்தது எனக் குறிப்பிட்டு விடையினை ஆரம்பிக்கலாம். அவையாவன, மகாதேசாதிபதி நாம நிர்வாகியாகவும் பிரதமர் உண்மை நிர்வாகியாகவும் காணப்படல் என ஆரம்பிக்க முடியும். நாம நிர்வாகம் பிரதமரின் ஆலோசனையின் பேரில் பிரித்தானிய முடியினால் நியமிக்கப்பட்டார். உண்மை நிருவாகியான பிரதமரை மகாதேசாதிபதி நியமிக்கின்றார். அவர் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெற்ற ஒருவராக இருந்தார்.

- இவ்விடையினை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க முடியும். முதலாவது பகுதி நாம நிர்வாகம் தொடர்பான தாகவும் இரண்டாவது பகுதி உண்மை நிர்வாகம் தொடர்பானதாகவும் அமையலாம்.

**கலந்துரையாடல் (06 புள்ளிகள்)**

**நாம நிர்வாகம் தொடர்பான கலந்துரையாடல் (03 புள்ளிகள்)**

- மகாதேசாதிபதி நாம நிர்வாகத்தின் தலைவராகக் காணப்பட்ட பிரித்தானிய முடியின் பிரதிநிதியாகவும் - தமது அரசியல் கடமைகளை முடியினதும் பிரதமரினதும் ஆலோசனைகளின் பெயரில் மேற்கொண்டார். மகாதேசாதிபதி பிரித்தானிய நலன்களை பாதுகாத்து பலப்படுத்த வேண்டும் என முடி எதிர்பார்த்தார்.

- அவரே அரசின் தலைவராகவும் முப்படைகளின் தலைவராகவும் காணப்பட்டார். அரசின் தலைவர் என்ற வகையில் பொது இலட்சினையினை பேணி வந்தார், வெளிநாட்டு தூதுவர்களை நியமித்தார், அவர்களுக்கான பொறுப்புக்களை வழங்கினார்.

- மகாதேசாதிபதி பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை பெற்ற ஒருவரை அல்லது வெற்றி பெற்ற கட்சியின் தலைவரை பிரதமராக நியமிக்கும் அதிகாரத்தைப் பெற்றிருந்தார்.

- இவர் பொதுச் சேவை ஆணைக்குழுவிற்கான உறுப்பினர்களை நியமித்தார். கணக்காய்வாளர் நாயகம், சட்டமா அதிபர், முப்படைகளின் தளபதிகள் போன்றோரை நியமிக்கும், நீக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தார். மிக முக்கியமாக முப்படைகளின் தலைவர்களை நீக்கும் அதிகாரத்தை கொண்டிருந்தார்.

- சிம்மாசன பிரசங்க உரையினை ஆற்றுதல் அவரின் பிரதான கடமையாக காணப்பட்டது. பாராளுமன்ற தேர்தல் முடிவடைந்து முதல் நாள் அமர்வில் மகாதேசாதிபதி அரசாங்கத்தின் கொள்கைகள், வேலைத்திட்டங்கள் தொடர்பான உரையினை நிகழ்த்துவார். இது பெரும்பாலும் பிரதமர் மற்றும் அமைச்சரவையால் தயாரிக்கப்படும்.

- பாராளுமன்றத்தைக் கூட்டும், கலைக்கும், ஒத்திவைக்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தார். இது நடைமுறையில் பிரதமரின் ஆலோசனையின் பெயரிலேயே இடம் பெற்றது. சட்ட மசோதாக்களுக்கு இறுதி அனுமதி வழங்கும் அதிகாரத்தைக் கொண்டிருந்தார்.

- செனட் சபையின் 15 உறுப்பினர்களையும் மக்கள் பிரதிநிதிகள் சபைக்கான ஆறு உறுப்பினர்களையும் நியமித்தார். நடைமுறையில் இதனை பிரதமரின் ஆலோசனையின் பெயரிலேயே மேற்கொண்டார்.

- பிரதம நீதியரசர் உட்பட, உச்ச நீதிமன்ற நீதிபதிகளை நியமித்தல், அத்துடன் அவர்களை பதவி நீக்கவேண்டுமாயின் மகாதேசாதிபதி செனட் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் சபையில் உரையொன்றினை ஆற்றுவதன் மூலம் பதவி நீக்க முடியும்.

- நீதிச் சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்களை மற்றும் அதன் தலைவரை நியமித்தல்.

- கைதிகளுக்கு பொது மன்னிப்பு வழங்கும் அதிகாரத்தினைக் கொண்டிருந்தார்.

**உண்மை நிர்வாகம் (03 புள்ளிகள்)**

- உண்மை நிர்வாகம் பிரதமராலும் அமைச்சரவையாலும் தலைமை தாங்கப்பட்டது. உண்மை நிர்வாகத்தினை அரசியல் நிருவாகம் எனவும் அழைத்தனர். உண்மை நிருவாகத்தின் அதிகாரங்கள் பின்வருமாறு

- பாராளுமன்றத்தால் உருவாக்கப்பட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.

- வருடாந்த வரவு செலவு திட்டத்தினை தயாரித்து பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.

- அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு கூட்டாக பொறுப்பு கூறுதல்.

- அமைச்சர்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்களை மேற்பார்வை செய்தல்.

- உயர் மட்ட நியமனங்கள் தொடர்பாக மகா தேசாதிபதிக்கு ஆலோசனை வழங்குதல். அமைச்சர்களை நியமித்தல், மாற்றம் செய்தல், நீக்குதல் ஆகிய விடயங்களில் மகா தேசாதிபதிக்கு ஆலோசனை வழங்குதல்.

- மக்கள் பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபைகளுக்கான நியமன உறுப்பினர்களை நியமிக்கும் போது மகா தேசாதிபதிக்கு ஆலோசனை வழங்குதல்.

- வெளிவிவகாரம் மற்றும் பாதுகாப்பு ஆகிய அமைச்சுக்கள் பிரதமரின் கட்டுப்பாட்டிலேயே காணப்பட்டது.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

பரீட்சார்த்திகள் பிரதான கலந்துரையாடல்களின் சுருக்கத்தினை முன்வைக்க முடியும். அரசியல் நிருவாகத்திற்கும் நாம நிருவாகத்திற்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டபோதும் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் இவை இரண்டுக்குமிடையே ஒத்துழைப்புடனான தொடர்புகளே காணப்பட்டன. 1972 முதலாம் குடியரசு அரசியலமைப்பு நாம நிருவாகியின் பிரித்தானிய தொடர்பினை முடிவுக்கு கொண்டுவந்தது.

## (iii) சட்டத்துறையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் (10 புள்ளிகள்)

**நோக்கம்**

சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்ட பாராளுமன்றம், அதன் அதிகாரங்கள் மற்றும் அதன் பணிகள் தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவினை மதிப்பிடுவதே இத்தலைப்பின் நோக்கமாகும்.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

பரீட்சார்த்திகள் விடையினை, சோல்பரி பாராளுமன்றத்தின் சட்டவாக்க அதிகாரமானது முடி, மகாதேசாதிபதி மற்றும் சிறுபான்மை காப்பீடுகள் ஆகிய வழிமுறைகளில் குறிப்பிடத்தக்களவு கட்டுப்படுத்தப்பட்டிருந்தது என ஆரம்பிக்க முடியும். எவ்வாறாயினும் இக்காலப்பகுதியில் இயற்றப்பட்ட சிறுபான்மையினருக்கு எதி ரான சட்டங்களை பார்க்கும் போது இதன் நடைமுறை வேறுபட்டதாக காணப்பட்டது.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- சோல்பரி பாராளுமன்றம் இரு சபைகளை கொண்டு காணப்பட்டது. அவை செனட் மற்றும் மக்கள் பிரதி நிதிகள் சபை என்பனவாகும். முதலாவது மேல் சபையாகவும் இரண்டாவது கீழ் சபையாகவும் காணப்பட்டது.

- மக்கள் பிரதிநிதிகள் சபைக்கான தேர்தல் மற்றும் அதன் கட்டமைப்பு என்பன அரசியலமைப்பின் 11ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தவகையில் 95 உறுப்பினர்கள் பிரதேசவாரி பிரதிநிதித்துவத்தின் மூலம் தெரிவுசெய்யப்பட்டனர். 6 பேர் பின்தங்கிய சமுதாயங்களிலிருந்தும் பிரதிநிதித்துவம் கிடைக்காத சமுதாயங்களிலிருந்தும் நியமிக்கப்பட்டனர்.

- பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 5 வருடம், அதன் தலைவராக சபாநாயகர் காணப்பட்டார். சில சமயங்களில் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் 5 வருடம் முடியும் முன்னரேயே முடிவுக்கு கொண்டு வரப்படும். அது வரவு – செலவு திட்ட மசோதா தோற்கடிக்கப்படுதல், சிம்மாசன பிரசங்க உரை தோல்வியடைதல், நம்பிக்கையில்லா பிரேரணை நிறைவேற்றப்படுதல் போன்ற சந்தர்ப்பங்களில் முன்கூட்டியே கலைக்கப்படும்.

**மக்கள் பிரதிநிதிகள் சபையின் அதிகாரங்கள்**

- நாட்டிற்கு தேவையான சட்டங்களை உருவாக்குதல்.
- நிறைவேற்றுத்துறையின் செயற்பாடுகளை மேற்பார்வை செய்தல்.
- வரவு-செலவு திட்டத்தை ஒன்றில் ஏற்றுக் கொள்ளுதல் அல்லது தோற்கடித்தல்.
- நிதி மசோதாக்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் / கொண்டு வருதல்.
- நாட்டின் பொது நிதியைக் கட்டுப்படுத்தல்.

**செனட் சபை**

- செனட் சபை, சட்டசபையின் இரண்டாம் சபையாக காணப்பட்டது. அது 30 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. 15 பேர் பிரதமரின் ஆலோசனையின் பெயரில் மகா தேசாதிபதியால் நியமிக்கப்பட்டனர். இதில் சிறுபான்மையினருக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டது மிகுதி 15 உறுப்பினர்கள் மக்கள் பரதிநிதிகள் சபையின் தனி மாற்று வாக்கு முறை அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டனர்.

- இது பாராளுமன்றத்தின் நிரந்தர சபையாக காணப்பட்டதுடன் உறுப்பினர்களின் பதவிக்காலம் 6 வருடம் என வரையறுக்கப்பட்டது. ஒவ்வொரு இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் பதவி விலக புதிய உறுப்பினர்கள் நியமிக்கப்படுவர்.

- செனட் சட்டவாக்க அதிகாரங்களைக் கொண்டிருந்தாலும் அதனால் நிதி சட்ட மூலங்களை கொண்டுவர முடியாது (31ஆம் உறுப்புரை). எனினும் அது பிரதிநிதிகள் சபையினை போன்று பெரிதும் வினைத்திறன் மிக்க வகையில் செயற்பட முடியவில்லை. எனினும் சட்டங்களை தாமதப்படுத்தும் அதிகாரம் இருந்தது. ஆயினும் மசோதாக்களை குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மேல் தாமதிக்கப்படுமாயின் கீழ் சபை அம்மசோதா வினை மீண்டும் நிறைவேற்றி நடைமுறைப்படுத்தும். இச்சந்தர்ப்பத்தில் செனட் சபையின் அனுமதியின்றி சட்டம் அமுலுக்கு வரும்.

- செனட் சபை உறுப்பினர்கள் அமைச்சரவையில் இடம்பெறுவர். நீதியமைச்சர் உட்பட ஆகக்குறைந்தது இரு அமைச்சர்கள் செனற்றிலிருந்து நியமிக்கப்பட வேண்டும்

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

பரீட்சார்த்திகள் பிரதான கலந்துரையாடல் தொடர்பான கருத்தினையும் இரு சபைகள் தொடர்பான ஒப்பீட்டு பார்வையினையும் முன்வைக்க முடியும். உதாரணமாக, செனட் ஒப்பிட்டளவில் பலவீனமான நிறுவனமாக காணப்பட்டதுடன், அதன் மூலம் எதிர்பாக்கப்பட்டவை மேலே குறிப்பிடப்பட்டுள்ள பல காரணிகளினால் அடைந்து கொள்ளப்படமுடியவில்லை. அதனால் செனட் சபையினை "வெள்ளை யானை" என விமர்சித்தனர். மறுபுறமாக, மக்கள் பிரதிநிதிகள் சபை அரசியல் அமைப்பில் உத்தரவாதப்படுத்தியிருந்த சிறுபான்மையினர் காப்பீடுகளை மறுதலித்ததுடன் சிறுபான்மையினருக்கு எதிரான சட்டங்களையும் உருவாக்கியது. பூரணமான இறைமைகொண்ட பாராளுமன்றமாக அது இருக்கவில்லை எனும் விமர்சனத்தை முன்வைக்கலாம். இதன் காரணமாக 1972ஆம் ஆண்டு பாராளுமன்றம் இலங்கை யின் சட்ட சபையினை மறுசீரமைத்தது, செனட் சபை இல்லாது செய்யப்பட்டு ஓரங்க சட்ட சபை உருவாக்கப்பட்டது. மக்கள் பிரதி நிதிகள் சபை தேசிய அரசுப் பேரவையென பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன் அரச அதிகாரத்தின் மீயுயர் கருவியாகவும் காணப்பட்டது.

**வினா இலக்கம் 06 :**

**1972 ஆம் ஆண்டு குடியரசு யாப்பின் கீழ் சட்ட மற்றும் நிர்வாக துறைகளுக்கிடையிலான தொடர்பினை ஆராய்க. ( 20 புள்ளிகள் )**

**நோக்கம்**

இவ்வினாவின் நோக்கமானது முதலாவது குடியரசு யாப்பின் சட்டத்துறைக்கும் (தேசிய அரசுப் பேரவை) மற்றும் ஜனாதிபதி, பிரதமாரால் தலைமை தாங்கப்படும் அமைச்சரவையினைக் கொண்ட நிர்வாகத்துறை என்பவற்றுக்கிடையிலான உறவுகள் தொடர்பாக பரீட்சார்த்திகள் கொண்டிருக்கும் அறிவினை மதிப்பி டுவதே ஆகும். இவ்விடையானது பரீட்சார்த்திகள் 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பு ஏற்பாடுகள் தொடர்பாக எந்-தளவுக்கு பரீட்சயம் கொண்டுள்ளார்கள் என்பதை வெளிக்காட்டுவதாக அமைய வேண்டும்.

**அறிமுகம் (03 புள்ளிகள்)**

1972 ஆம் ஆண்டு அரசியல் திட்டம் தொடர்பாக சுருக்கமான அறிமுகத்தினை வழங்குவதன் மூலம் விடை யினை எழுத ஆரம்பிக்கலாம். குறிப்பாக அது ஒரு குடியரசு யாப்பாகக் காணப்பட்ட போதும், வெஸ்ட்மின் ஸ்டர் அரசியலமைப்பு மாதிரிக்கான பண்புகளைக் கொண்டிருந்தது என குறிப்பிட முடியும். அந்தவகை யில் 1972 ஆம் ஆண்டு யாப்பு ஒரு கலப்பு பண்புகளைக் கொண்டிருந்தது. 1972 ஆம் ஆண்டு அரசியல் அமைப்பில் சட்டத்துறையானது ஓரங்க சபையாக காணப்பட்டதுடன், செனட் சபை இல்லாதொழிக்கப்பட்டது. சட்டசபையின் பெயர் தேசிய அரசுப் பேரவை என பெயர் மாற்றம் செய்யப்பட்டதுடன், அதன் உறுப்பினர்கள் நேரடியாக மக்களால் தெரிவு செய்யப்பட்டார்கள். மேலும் அது அரச அதிகாரத்தின் மீயுயர் கருவியா-க் காணப்பட்டது. இந்த மீயுயர் தன்மையினை விமர்சகர்கள் 1972ஆம் ஆண்டு அரசியல் திட்டத்தினை உருவாக்கியவர்கள் அதிகாரப்பிரிவினைக் கோட்பாட்டினை மறுதலித்துள்ளனர் என விமர்சித்துள்ளனர். இவ்வரசியல் திட்டத்தின் கீழ் நிர்வாகம் இரு மையங்களில் காணப்பட்டது. நாம நிர்வாகம் ஜனாதிபதியைக் கொண்டதாகவும், உண்மை நிர்வாகம் பிரதமர் தலைமைதாங்கும் அமைச்சரவையைக் கொண்டதாகவும் காணப்பட்டது. 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பு திட்டத்தின் செயட்பாட்டினை பகுப்பாய்வு செய்யும் போது சட்ட - நிர்வாகத் துறைகளுக்கிடையிலான உறவு ஒரு முக்கியமான விடயமாக காணப்படுகின்றது.

**கலந்துரையாடல் (14 புள்ளிகள்)**

- 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்புச் சட்டம் இலங்கையினை குடியரசாக்கியது. ஆயினும், அது முழு அளவிலான குடியரசாகக் காணப்படவில்லை. காரணம், பிரதமரால் ஜனாதிபதி நியமிக்கப்பட்டமையாகும். ஜனாதிபதி நாம நிர்வாகத்தின் தலைவராகக் காணப்பட்டார். ஆகவே, அவர் உண்மை நிர்வாகத்தின் அதி-காரங்களைக் கொண்டிருக்கவில்லை. உண்மை நிர்வாக அதிகாரம் பிரதமர் மற்றும் அமைச்சரவையிடமே காணப்பட்டது. அவர்கள் சட்ட சபையின் உறுப்பினர்கள் ஆவர். இது வெளிப்படுத்தும் தத்துவம் யாதெனில் 1972ஆம் ஆண்டு அரசியல் திட்டம் ஜனாதிபதி தலைமைதாங்கிய நாம நிர்வாகத்தை விட சட்டத்துறையை அதிகாரம்மிக்க நிறுவனமாக மாற்றியமையாகும்.

- 1972 ஆம் ஆண்டு அரசியலமைப்பு திட்டத்தின் கீழ் சட்டத்துறையாகக் காணப்பட்ட தேசிய அரசுப் பேரவை சட்டவாக்கத்தில் உச்ச அதிகாரத்தைக் கொண்டிருந்தது (உறுப்புரை 44). ஆட்சிமுறைக் கட்டமைப்பின் மத்-திய நிறுவனமாகக் காணப்பட்டது. அரசியலமைப்பின் 4ஆம் உறுப்புரை மக்களின் இறைமை அதிகாரம் சட்டத்துறையாகிய தேசிய அரசுப் பேரவையால் பிரயோகிக்கப்படும் என குறிப்பிடுகின்றது. உறுப்புரை 5இன் படி தேசிய அரசுப் பேரவை அரச அதிகாரத்தின் மீயுயர் கருவி என குறிப்பிடப்படுவதுடன், அது மக்க-ளின் சட்டத்துறை, நிறைவேற்றுத்துறை மற்றும் நீதித்துறை அதிகாரங்களைப் பிரயோகிக்கின்றது என குறி-ப்பிடப்படுகின்றது.

- அரசியலமைப்பிற்கிணங்க, தேசிய அரசுப் பேரவைக்கு தனது சட்டத்துறை அதிகாரத்தை துறக்கவோ, ஒப்படைக்கவோ அல்லது ஏதேனுமொரு வகையில் அந்நியப்படுத்தவோ முடியாது (உறுப்புரை 45). இது தேசிய அரசுப் பேரவைக்கு சட்டங்களை உருவாக்குவதற்கு எல்லையற்ற அல்லது நிகரற்ற அதிகாரங்களை வழங்குகின்றது.

- எவ்வாறாயினும் பிரதமர் மற்றும் அமைச்சரவையின் அமைச்சர்களைக் கொண்ட அரசியல் நிர்வாகமானது தேசிய அரசுப் பேரவையில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்ற கட்சியில் இருந்து அல்லது கூட்டமைப்பில் இருந்து நியமிக்கப்படுகின்றார்கள். ஆகவே, அரசியல் நிர்வாகம் சட்டசபையின் ஒரு பகுதியாகும். அந்தவகையில் பிரதமர் மற்றும் அமைச்சரவை அமைச்சர்கள் தேசிய அரசுப் பேரவையையின் அரசியல் பிரதிநிதிகள் ஆவர்.

- அமைச்சர்கள் மற்றும் அமைச்சர்களுக்கான பொறுப்புக்களை அல்லது விடயங்களை ஒதுக்குவது பிரதமரின் பொறுப்பாகும். நிறைவேற்றுத் துறையின் தலைவர் என்ற வகையில் அமைச்சரவையின் சேர்க்கை தொடர்பான தீர்மானம் எடுக்கும் முழு அதிகாரத்தையும் கொண்டிருந்தார்.

- 1972ஆம் ஆண்டு அரசியலமைப்புத் திட்டத்தின் கீழ் நிறைவேற்றுத்துறை வெஸ்ட்மின்ஸ்டர் மரபின் அடிப் படையில் தாபிக்கப்பட்டது. மேலே குறிப்பிட்டது போன்று நிறைவேற்றுத்துறை நாம மற்றும் உண்மை என்ற இரு பகுதியினைக் கொண்டு காணப்பட்டது. நாம நிர்வாகத்தின் தவைராக ஜனாதிபதி காணப்பட்டார்.

- அரசியல் நிர்வாகம் அமைச்சர்கள் மற்றும் அமைச்சரவைக்கு தலைமைதாங்கும் பிரதமரினால் தலைமைத் தாங்கப்பட்டது. அரசியல் நிர்வாகத்தின் உறுப்பினர்கள் சட்ட சபை உறுப்பினர்களாகவும் காணப்பட்டனர்.

- அரசியல் நிர்வாகத்துறையின் தலைவராக காணப்பட்ட பிரதமர் தேசிய அரசுப்பேரவை உறுப்பினராகக் காணப்பட்டதுடன் அவர் தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களில் பெரும்பான்மை நம்பிக்கையினைக் கொண்டவராகவும் இருக்க வேண்டும்.

- பிரதமர் பலமானவராக காணப்படின், அவர் தேசிய அரசுப் பேரவையினை தனது செல்வாக்கிற்கு உட்படுத்த முடியும். நடைமுறையில் அரசியல் நிர்வாகம், அதாவது பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை நேரடியாகவே சட்டத்துறையின் மீது ஆதிக்கம் செலுத்தியது.

- ஜனாதிபதிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையினை நிறைவேற்றும் அதிகாரத்தை தேசிய அரசுப் பேரவை கொண்டிருந்தது (26 (2) உறுப்புரை). அந்த வகையில் நாம நிர்வாகத்தின் தலைவர் ஜனாதிபதியாக இருந்த போதும் அவர் சட்டத்துறையில் இருந்து சுயாதீனமாக இருக்கும் நிலைகாணப்படவில்லை.

**முடிவுரை** **(03 புள்ளிகள்)**

1972 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட குடியரசு யாப்பின் கீழ் சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறை என்பனவற்றுக்கிடையிலான உறவு குழப்பகரமானதாகவே காணப்பட்டது. அது ஒரு பலவீனமான நாம நிர்வாகத்தினையும் ஒரு பலமான அரசியல் நிர்வாகத்தினையும் சட்டத்துறையினையும் உருவாக்கியது. அரசியல் நிறைவேற்றுத்துறை உறுப்பினர்கள் சட்டத்துறை உறுப்பினர்களில் இருந்து நியமிக்கப்பட்டார்கள். தேசிய அரசுப்பேரவை அரச அதிகாரத்தின் மீயுயர் கருவியாக காணப்பட்டபோதிலும், சில சமயங்களில் பிரதமர் மற்றும் அமைச்சரவை அமைச்சர்கள் சட்டத்துறையை மீறிச் செல்லும் நிலை காணப்பட்டது. 1972 ஆம் ஆண்டு அரசியல் திட்டத்தில் பின்தொடர்ந்த வெஸ்ட்மின்ஸ்டர் மாதிரியிலான அரசாங்க முறையின் பிரிக்க முடியாத பண்பு யாதெனில் சட்டத்துறையில் இருந்து நிர்வாகம் தோற்றம் பெறுவதாகும். அதன்

விளைவாக, சட்டம் மற்றும் நிர்வாகத்துறை என்பன முரண்பாடுகளில் ஈடுபடுவதை விட ஒத்துழைப்பு வழங்க வேண்டியிருந்தது.

**வினா இலக்கம் 07 :**

**1978 ஆம் ஆண்டு மூல அரசியல் யாப்பு மற்றும் அத்துடன் தொடர்புடைய சீர்த்திருத்தங்கள் தொடர்பான பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் இரண்டினை ஆராய்க.**

(i) **அரசின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதியின் வகிபங்கு**

(ii) **சட்டத்துறையின் அதிகாரங்களும் அவற்றின் மீதான மட்டுப்பாடுகளும்**

(iii) **அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் நீதித்துறையின் பொறுப்பு**

(iv) **அரசியல் அமைப்புப் பேரவையின் முக்கியத்துவமும் அதற்கெதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங்களும்**

**(10 × 2 = 20 புள்ளிகள் )**

**நோக்கம்**

1978ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் பிரதான பகுதிகள் சிலவற்றைப் பற்றி மாணவர்களிடம் காணப்படும் அறிவு மற்றும் விவரிப்பு திறனை மதிப்பிடுவதே இவ்வினாவின் மூலம் எதிர்ப்–பார்க்கப்படுகின்றது.

(i) **அரசின் தலைவர் என்ற வகையில் ஜனாதிபதியின் வகிபங்கு** **(10 புள்ளிகள்)**

**நோக்கம்**

1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பிற்கு ஏற்ப அரசின் தலைவர் என்ற வகையில் சனாதிபதியின் வகிபங்கு தொடர்பில் பரீட்சார்த்திகள் கொண்டுள்ள அறிவு மற்றும் தெளிவினை மதிப்பிடுவதே இதன் நோக்கமாகும்.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் அரசின் தலைவரின் வகிபங்கு சனாதிபதியால் பரவலடைவதோடு அங்கு அமைச்சரவையினதும் அரசாங்கத்தினதும் தலைவராவார் எனும் விடயத்தினை தெளிவு–படுத்தி விடையினை ஆரம்பிக்க முடியும். இதன்படி 1978 அரசியலமைப்பின் கீழ் அரசின் தலைவர் என்பது பெரும்பாலும் நாம நிருவாக மற்றும் கௌரவ பதவியன்றி அரச இயந்திரத்தின் மைய அதிகார மத்திய நிலையமாக இருந்தது.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- 1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பிற்கு ஏற்ப சனாதிபதியின் வகிபங்குகள் பல வெளிப்படுவதோடு அதில் அரச தலைவர் எனும் வகிபங்கு சனாதிபதியை அரசியலமைப்பின் கீழ் அரச தலைவருக்குரிய பொறுப்பாளராக்கியது.

- 1978 இரண்டாம் குடியரசு அரசியலமைப்பின் 33 மற்றும் 34 உறுப்புரைகளுக்கு ஏற்ப அரசின் தலைவர் என்ற வகையில் சனாதிபதியின் அதிகாரங்களை இவ்வாறு சுருக்கமாக குறிப்பிட முடியும்.

- சனாதிபதி அரசின் தலைவர் என்ற வகையில் பல்வேறு நியமனங்களை மேற்கொள்ள யாப்பில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதில், தூதுவர்கள், ஆணையாளர்கள், அரச தூதுவர்கள் என்போரை நியமிக்கவும் அவர்களுக்கு அதிகாரங்களை வழங்கவும் அவர்களை ஏற்றுக்கொள்ளவும் அதிகாரம் உண்டு.

- சட்டத்தொழிலில் சிறப்பு தேர்ச்சிகளைக் கொண்ட நீதிபதிகளை சனாதிபதி சட்டத்தரணிகளாக நியமிக்க முடியும்.
- பிரதமர், அமைச்சரவையினை நியமித்தல்
- உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் மற்றும் ஏனைய நீதிபதிகளை நியமித்தல்.
- அரச இலச்சினையை தமது கட்டுப்பாட்டில் வைத்திருத்தல்.
- யுத்தம் மற்றும் சமாதானத்தைப் பிரகனடம் செய்தல்.
- அரசியலமைப்பில் எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாத விதிமுறைகளுக்கு எதிராகவில்லாத சர்வதேச சட்டம், ஒழுக்க நியமங்களுக்கு உட்படுதல்.
- குற்றவாளிகளுக்கு நிபந்தனைகளுடன் மன்னிப்பளித்தல், மற்றும் முழுமையாக மன்னிப்பளித்தல்.
- மரண தண்டனை வழங்குதல் மற்றும் மானியங்கள் வழங்கல்
- வழக்கு தொடருவதிலிருந்து விடுபாட்டுரிமையை பெற்றுள்ளமையும் சனாதிபதி அரச தலைவர் என்ற வகையில் அனுபவிக்கும் சலுகையாகும். இது அவரின் பதவி காலத்தில் அவர் செய்த உத்தியோகப்பூர்வ அல்லது தனிப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் பொருத்தமுடையதாகும் (35 (1) உறுப்புரை).

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

அரச தலைவர் என்றவகையில் சனாதிபதிக்கு உரித்தான அதிகாரங்கள் 1978 அரசியலமைப்பின் கீழ் ஜனாதிபதிக்கு கிடைத்திருக்கின்ற பெரியளவிலான அதிகாரங்களின் ஒரு பகுதியாகும் என குறிப்பிட்டு விடையினை நிறைவு செய்ய முடியும். சில அதிகாரங்களை பிழையாக அல்லது பக்கச்சார்பாக சனாதிப திகள் பயன்படுத்தியமை தொடர்பில் குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. அக்குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளி-க்கும் வகையில் 19ஆம் திருத்தத்தின் மூலம் அவற்றில் சில நீக்கப்பட்டுள்ளமையை குறிப்பிட முடியும்.

## (ii) சட்டத்துறையின் அதிகாரங்களும் அவற்றின் மீதான மட்டுப்பாடுகளும்

**(10 புள்ளிகள்)**

**நோக்கம்**

1978 அரசியலமைப்பில் சட்டத்துறைக்குப் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பற்றியும் அவற்றின் வரையறைகள் பற்றியும் பரீட்சார்த்திகளின் அறிவினை பரிசோதிப்பதே நோக்கமாகும்.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

1978 அரசியலமைப்பின் கீழ் சட்டத்துறை பாராளுமன்றம் என அறியப்பட்டதோடு அது வெஸ்ட்மின்ஸ்-டர் சம்பிரதாயத்தில் இருந்து விடுபட்ட ஓரவை சட்டமன்றம் என்பதையும் குறிப்பிட்டு விடையினை ஆரம்பி க்க முடியும். 1978 சட்டத்துறையின் அதிகாரங்கள் 1972 அரசியலமைப்பு உருவாக்கிய தேசிய அரசுப் பேரவையில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது என்பதையும் இங்கு குறிப்பிட முடியும். 1972 சட்டத் துறை மாற்றமடைந்து சட்டத்துறை நிறைவேற்றுத்துறை என இரு பிரிவுகளாகக் காணப்பட்டன.

**கலந்துரையாடல் (06 புள்ளிகள்)**

- மேற்குறிப்பிட்ட அறிமுகத்தின் இறுதியில் குறிப்பிட்ட விடயங்களை மேலும் தெளிவுபடுத்தி கலந்துரையாடலை ஆரம்பிக்க முடியும். இதன்படி சட்டத்துறை "நிறைவேற்று சனாதிபதி" முறையின் நிறைவேற்றுத் துறையின் தலைவரான சனாதிபதியின் அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது.

- கலந்துரையாடலை உப தலைப்புகள் இரண்டினூடாக ஒழுங்குபடுத்த முடியும்.
  1. சட்டத்துறையின் அதிகாரம்
  2. அவற்றின் மீதான வரையறைகள்

- சட்டத்துறையின் அதிகாரங்களை கீழ்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிட முடியும்.
  - சட்டவாக்க அதிகாரம்
  - நிதிக் கட்டுப்பாடு
  - நிறைவேற்றுத்துறையைக் கட்டுப்படுத்தல்
  - அரசியலமைப்பினைத் திருத்தல் மற்றும் நீக்குதல்

**வரையறைகள்**

- சட்டத்துறையின் சட்டவாக்க அதிகாரத்திற்கு அரசியலமைப்பினை இடைநிறுத்துவதற்கு அல்லது அதிகாரமற்றதாக்குவதற்கு முடியாது. புதிய அரசியலமைப்பொன்றினை சட்டமாக்காது அரசியலமைப்பினை இடைநிறுத்த முடியாது. (75ஆம் உறுப்புரை)

- பாராளுமன்றம் முன்வைத்துள்ள ஏதேனும் சட்டமூலத்தின் யாப்புறு தன்மையினை நீதிமன்றம் சவாலுக்கு உட்படுத்தியிருக்குமாயின் உயர் நீதிமன்றத்தின் தீர்வுக்கு ஏற்ற வகையில் அல்லது 2/3 பெரும்பான்மையினால் மட்டுமே சட்டத்துறையால் அச்சட்ட மூலத்தினை விவாதித்து சட்டமாக்க முடியும்.

- சட்டத்தை உருவாக்கும் முழுமையான அதிகாரம் சட்டத்துறைக்குக் கிடையாது. தேவையாயின் சனாதிபதி மக்கள் அபிப்பிராயத்தின் ஊடாக சட்டத்தை உருவாக்க முடியும் (4ஆம் உறுப்புரை)

- சனாதிபதி சட்டத்துறையின் உறுப்பினரல்லாதபோதும் அவர் அமைச்சரவையின் தலைவர் என்ற அடிப்படையில் சட்டவாக்க செயற்பாட்டில் நேரடியான தாக்கத்தைச் செலுத்த முடியும்.

**முடிவுரை (02 புள்ளிகள்)**

1978 அரசியலமைப்பின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டத்துறை, 1972 யாப்பினால் உருவாக்கப்பட்ட சட்டத்துறையினைக் காட்டிலும் மாறுபட்டதாகும். அது விசேடமாக அரச கட்டமைப்பினுள் சட்டவாக்கத்துறைக்கிருந்த நிலை தொடர்பானதாகும். அதற்கு சட்டத்தை ஆக்கும் அதிகாரம் காணப்பட்டபோதும் அவ்வ- திகாரத்தை நிறைவேற்றுத்துறையின் தலைவரான சனாதிபதியின் நேரடி கட்டுப்பாட்டிற்குள் இருந்தது. இதன்படி சட்டத்துறை மற்றும் நிறைவேற்றுத்துறைக்கிடையில் அதிகாரப் பிரிப்பொன்று காணப்படவில்லை என்பதோடு சட்டத்துறை நிறைவேற்றுதுறையின் ஆதிக்கத்திற்கு உட்படும் நிலையினை ஏற்படுத்தியது. இது 1978 அரசியலமைப்பு தொடர்பாக முன்வைக்கப்பட்ட பாரிய குற்றச்சாட்டிற்கும் வழிகோலியது. 19ஆம் திருத்தத்தின் மூலம் இந்த தொடர்பினை மாற்றியமைத்து சட்டத்துறை ஒப்பீட்டு ரீதியாக சுயாதீனத்தை மீண்டும் உருவாக்கியமை இதற்கு பதில் வழங்கும் செயற்பாடாக அமைந்தது.

## (iii) அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதில் நீதித்துறையின் பொறுப்பு (10 புள்ளிகள்)

**நோக்கம்**

பிரசைகளின் அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பில் இலங்கையின் உயர்நீதிமன்றம் கொண்டுள்ள பணிகள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் தெளிவினை பரிசோதித்தல் இவ்வினாவின் நோக்கமாகும்.

**அறிமுகம் (02 புள்ளிகள்)**

அடிப்படை உரிமைகள் என்பதை சுருக்கமாக முன்வைத்து விடையினை ஆரம்பிக்க முடியும். தமது அடிப்படை உரிமைகள் மீறப்படும் போது நீதிமன்றத்தின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கான பிரசைகளுக்கான வாய்ப்பினை விரிவுபடுத்துவதற்காக 1978ஆம் ஆண்டு யாப்பில் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமையை இதன் கீழ் குறிப்பிடமுடியும்.

**கலந்துரையாடல் (06 புள்ளிகள்)**

- 1978 அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்காக கொண்டுவரப்பட்டுள்ள விதிமுறைகள் பற்றி சுருக்கமான அறிமுகத்தோடு விடையினை ஆரம்பிக்க முடியும்.

- அடிப்படை உரிமைகள் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் மற்றும் செயற்பாடுகளை 1978 அரசியலமைப்பின் 126 ஆவது உறுப்புரை குறிப்பிட்டுள்ளது. அரசியலமைப்பின் மூன்று அல்லது நான்காம் அத்தியாயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளது அல்லது மீறப்படவுள்ளது என்பது தொடர்பிலான நீதிமன்ற அதிகாரத்தை உயர்நீதிமன்றம் பெற்றுள்ளது. மூன்றாம் அத்தியாயத் தில் அடிப்படை உரிமைகள் விவரிக்கப்பட்டுள்ளதோடு நான்காம் அத்தியாயத்தில் மொழி உரிமை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

- இவ்வாறு மீறல்கள் நடைபெற்று ஒரு மாதத்திற்குள்ளாக கோரிக்கையினை உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பவேண்டும். இக்கோரிக்கையினை பிரசைகள் நேரடியாகவும் அல்லது சட்டத்தரணி ஊடாகவும் முன்வைக்க முடியும்.

- இவ்வாறான கோரிக்கைகள் தமக்கு கிடைத்த பின்னர் உயர்நீதிமன்றம் முதலில் அக்கோரிக்கை பற்றி விசாரணை ஒன்றினை மேற்கொள்வது பொருத்தமானதா என்பதை தீர்மானிக்கும். பின்னர் இதற்காக அனுமதி பெற்றுக் கொடுத்து உயர்நீதிமன்றம் வழக்கினை விசாரித்து தீர்ப்பினை வழங்கும்.

- அரசியலமைப்பில் பல்வேறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளபோதும் உயர் நீதிமன்றத்திடம் காணப்படும் அடிப்படை உரிமைகள் தொடர்பாக தீர்மானிக்கும் அதிகாரத்தை மாற்றவில்லை. எவ்வாறாயினும் 19ஆம் அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் நிறைவேற்றுத்துறையின் அழுத்தங்கள் இல்லாமல் நீதித்துறையின் சுயாதீனத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம் அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் பொறுப்புகள் மேலும் சுயாதீனமானதாகவும் வலுவானதாகவும் மாறி யுள்ளது.

- அடிப்படை உரிமைகள் தொடர்பில் நீதிமன்ற அதிகாரம் இருக்கின்ற ஒரே நீதிமன்றம் உயர்நீதிமன்றம் ஆகும். எவ்வாறாயினும் பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை பாதுகாத்தல் எனும் நோக்கத்தில் உருவாக் கப்பட்ட ஏனைய இரு நிறுவனங்களும் உண்டு. மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஒம்புட்ஸ்மன் என்பனவே அவையாகும்.

- பிரசைகளின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதில் உயர்நீதிமன்றம் ஜனநாயகத் தன்மை மற்றும் சட்டத் தின் ஆட்சி பாதுகாக்கப்படுதல் தொடர்பில் முக்கிய பங்கினை ஆற்றுகிறது. பிரஜைகளின் சுதந்திரத்தை பாதுகாத்தல் உயர்நீதிமன்றத்தின் முக்கிய பணியாகும். இதனை உறுதிப்படுத்துவதற்காக நீதி மன்றம் நிறை வேற்றுத்துறையின் தலையீட்டில் இருந்து சுதந்திரமாக இருத்தல் வேண்டும்.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

1978 அரசியலமைப்பின் கீழ் உயர்நீதிமன்றம் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை பாதுகாப்பதற்கான முக் கிய நிறுவனமாக மாறியுள்ளது. இது 1978 அரசியல் அமைப்பினால் ஏற்படுத்தப்பட்ட முக்கியமான தொருபடைப்பாகும். பிரசைகளின் உரிமைகள் மீறப்படும்போது அது தொடர்பில் செயற்படுவதற்கு உயர் நீதி மன்றத்திற்கு அதிகாரம், பின்பற்றவேண்டிய விதிமுறைகளை 1978 அரசியலமைப்பு தெளிவாக குறிப் பிட்டுள்ளது. நிறைவேற்றுத்துறையின் அதிகாரமன்றி பிரசைகளின் உரிமைகளை பாதுகாத்தல் தொடர்பில் புகழினைப் பெற்றுக்கொண்டு இலங்கையின் நீதிமன்றம் பணியாற்றுகிறது.

**(iv) அரசியல் அமைப்பு பேரவையின் முக்கியத்துவமும் அதற்கெதிராக முன்வைக்கப்பட்ட விமர்சனங்களும்.**

**(10 புள்ளிகள்)**

**நோக்கம்**

இத்தலைப்பின் நோக்கமானது 1978 அரசியலமைப்பின் 17 மற்றும் 19 திருத்தங்களின் மூலம் உருவாக் கப்பட்ட அரசியலமைப்பு பேரவை தொடர்பில் பரீட்சார்த்திகள் அறிவு மற்றும் தெளிவினை பரிசோதிப்பது ஆகும். பேரவையின் பணிகள் மற்றும் மேற்கொள்ளும் சேவைகள் தொடர்பில் சமூகத்தில் காணப்படும் கலந்துரையாடல் தொடர்பாக பரீட்சார்த்திகளின் புரிதல் இதன் மூலம் பரிசோதிக்கப்படுகின்றது.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

அரசியலமைப்புப் பேரவை 17 மற்றும் 19 ஆம் அரசியலமைப்பு திருத்தங்களால் உருவாக்கப்பட்டது என்பதை குறிப்பிட்டு விடையினை ஆரம்பிக்க முடியும். ஜனநாயக ஆட்சிமுறை மற்றும் சட்டத்தின் ஆட்சிக்கு தேவை யான பாதுகாப்பு மற்றும் தலையீடுகள் என்ற வகையில் இது முக்கியமானதொரு நிறுவனம் என்பதை குறிப் பிடமுடியும்.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- 19ஆம் திருத்தத்தில் தாபிக்கப்பட்ட அரசியலமைப்புப் பேரவையின் கட்டமைப்பினை சுருக்கமாக குறிப்பிட வேண்டும். கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பேரவையின் அதிகாரங்களை அறிமுகப்படுத்தல்.

1. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள சுயாதீன ஆணைக்குழுக்களின் தலைவர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதிக்கு பரிந்துரை செய்தல்.

   தேர்தல்கள் ஆணைக்குழு, அரச சேவை ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வுசேவை ஆணைக்குழு, மனித உரிமைகள் ஆணைக்குழு, ஊழல் மற்றும் இலஞ்ச விசார–

ணை செய்யும் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, தேசிய பெறுகை ஆணைக்குழு.

2. கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு ஜனாதிபதியால் பரிந்துரைக்கப்படுகின்ற நபர்களை அரசியலமை-ப்புப்பேரவை அனுமதித்தல்.

உயர்நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் மற்றும் ஏனைய உயர்நீதிமன்ற நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற தலைவர் மற்றும் ஏனைய நீதிபதிகள், நீதிச்சேவை ஆணைக்குழுவின் உறுப்பினர்கள், சட்டமா அதிபர், கணக்காய்வாளர், பொலிஸ்மா அதிபர், ஒம்புட்ஸ்மன் மற்றும் பாராளுமன்ற பொதுச் செயலாளர்

**விமர்சனம்**

- அரசியலமைப்பு பேரவைக்கு பொதுமக்களினை பிரதிநிதித்துவம் செய்யாத சிவில் சமூக உறுப்பினர்கள் நியமிக்கப்படுவதன் மூலம் ஜனாதிபதியின் அதிகாரம் பாதுகாக்கப்படுகிறது என்பது தொடர்பில் கவலை வெளியிடப்பட்டுள்ளது.

- பேரவையின் கட்டமைப்பில் காணப்படும் அதிகார சமநிலை அரசாங்க கட்சியின் நன்மையை சார்ந்து இருப்பதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

- ஜனாதிபதியினால் நீதித்துறை நியமனங்களுக்காக செய்யப்பட்ட பரிந்துரைகளை ஆணைக்குழுக்கள் மூலம் அவரின் அதிகாரம் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்கள் உண்டு என்ற குற்றச்சாட்டுக்கள் அண்மைக் காலத்தில் எழுந்துள்ளது.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

அரசியலமைப்புப் பேரவை ஜனநாயக ஆட்சி முறைக்கு அத்தியவசியமான அங்கம் ஒன்றாகவும், அரசாங்கத்தின் மேலான நிறுவனமாகிய நிறைவேற்றுத்துறையின் அதிகாரத்தை கட்டுப்படுத்தல் தொடர்பில் முக்கியமான பணியினை மேற்கொண்டுள்ளது என்பதை சுட்டிக்காட்டி முடிவினை ஆரம்பிக்க முடியும். அரச சேவையில் அரசியல் கலப்பு இல்லாது செய்தல் மற்றும் நிறைவேற்றுத்துறையின் தலைவராக ஜனாதிபதி தமது அதிகாரங்களை மிஞ்சி செயற்படுவதைத் தடுத்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. 17 ஆவது திருத்தம் 19 ஆவது திருத்தத்தின் பின்புலமாக அமைந்தது. அரசியலமைப்புப் பேரவை இதன் அதிகா ரத்-தினை கட்டுப்படுத்துவதன் அவசியம் உணரப்பட்டமையினாலேயே உருவாக்கப்பட்டது. இவ்வாறான பி-ன்புலத்தில் பேரவை தொடர்பில் விமர்சனங்களும் ஏற்படுவது வியப்புக்குரியது அல்ல. அவை பேரவை தொடர்பிலான மக்களின் நம்பிக்கையை சீர் குலைக்காமல் இருக்குமாயின் அவ்வாறான குற்றச்சாட்டுக்கள் பயனுடையதாக இருக்கும்.

**8. இந்திய சமஷ்டி அரசாங்க மாதிரியினை ஓர் அரைகுறை சமஷ்டி முறை என விபரிப்பதற்கான காரணங்களை விளக்குக. (20 புள்ளிகள்)**

**நோக்கம்**

இந்தியாவின் சமஷ்டி முறையில் காணப்படும் அதற்கே உரிய பண்புகளை அடையாளம் காண்பதும் இவ் அரசியலமைப்பின் வளர்ச்சி சமஷ்டி முறையில் இருந்து மாறிவரும் மாதிரி ஒன்றாக சுட்டிக்காட்டுவதற்கு மாணவருக்குள்ள இயலுமையினை மதிப்பிடுவது இவ்வினாவின் நோக்கமாகும்.

**அறிமுகம் (03 புள்ளிகள்)**

இந்திய சமஷ்டி முறையானது மரபுரீதியான சமஷ்டி முறையில் இருந்து வேறுபடுகின்றது என்பதைக் குறிப்பிட்டு விடையினை ஆரம்பிக்க முடியும். இந்தியா 1947ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதன் பின்னர் அரசியல் அமைப்பு உருவாக்கத்தின் போது மாற்றங்களுடன் கூடிய சமஷ்டி மாதிரியினை தழுவிக்கொண்டமைக்கான பின்னணியையும் அறிமுகத்தில் வழங்க வேண்டும்.

**கலந்துரையாடல் (14 புள்ளிகள்)**

- இந்திய சமஷ்டி முறையானது சில சமயங்களில் அல்லது பொதுவில் அரை குறை எனவும் அது முழுமையான சமஷ்டி முறையல்ல எனவும் அடையாளப்படுத்தப்படுகின்றது.

- இந்தியா தெளிவானதொரு ஒற்றையாட்சி அரசும் அல்ல. இந்திய குடியரசு ஒரு வகையான அதிகார பகிர்வு முறையின் மூலம் ஆட்சி செய்யப்படுகின்றது. மாநில அரசாங்கங்கள் தமக்கேயுரிய சட்ட மற்றும் நிறைவேற்று துறைகளைக் கொண்டுள்ளன. அரசியலமைப்பு மூன்று வகையான பட்டியல்களின் கீழ் மத்திய அரசாங்கத்தினதும் மாநில அரசாங்கங்களினதும் அதிகாரங்களை வரையறை செய்கின்றது. அது பொதுவில் சமஷ்டி என அழைக்கப்படுவதில்லை. இது ஒற்றையாட்சியா அல்லது சமஷ்டி ஆட்சியா என அரசியலமைப்பில் குறிப்பிடப்படவில்லை.

- இந்திய குடியரசினை ஒரு அரைகுறை சமஷ்டி என பொதுவில் குறிப்பிடுவதற்கு பின்வரும் காரணங்கள் ஆதரவாக இருக்கின்றன.

I. இந்திய குடியரசு ஒற்றையாட்சியா அல்லது சமஷ்டியா என யாப்பில் குறிப்பிடவில்லை.

II. அரசியலமைப்பின் உறுப்புரை 352 அவசரகால நிலையின்போது அதிக அதிகாரங்களை மத்திய அரசாங் கத்திற்கு வழங்குகின்றது. இவ்வுறுப்புரையின் படி மத்திய அரசாங்கம் ஒருமைப்பாட்டை பாதுகாத்தல், பாது காப்பு, தேசிய அவசரகால நிலைமையின் போது நாட்டின் உறுதித்தன்மையினை பேணுதல் தொடர்பான விடயங்களில் தனிமுதன்மை அதிகாரத்தைக் கொண்டிருக்கும்.

III. அத்துடன், உறுப்புரை 356ன் படி, ஜனாதிபதிக்கு மாநில அரசாங்கத்தை கலைத்துவிட்டு அம்மாநிலத்தை ஜனாதிபதியின் ஆட்சியின் கீழ் கொண்டு வரமுடியும்.

- இந்திய அரசியலமைப்பின் சமஷ்டி என்ற உணர்வின் மீது அவசரக்கால நிலமை மிகவும் எதிர்மறை யான தாக்கத்தினையே ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, அவசரகால நிலமை ஏற்படும் போது அல்லது பிரகடனப்படுத்தப்படும் போது சமஷ்டி தன்மை அல்லது இயல்பு மறுதலிக்கப்பட்டு அரசாங்கம் ஒற்றையா ட்சியாக செயற்பட முற்படுகின்றது.

- மாநில அரசாங்கங்களை மத்திய அரசாங்கத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு பல வழி-கள் இந்தியாவில் காணப்படுகின்றன. முதலாவதாக, மாநில அரசாங்க சட்டசபையை கலைக்க முடியும். இதன் மூலம் மாநில நிறைவேற்றுத்துறை ஜனாதிபதியின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படு கின்றது. இரண்டாவது, மாநில சட்டசபை கலைக்கப்படுகின்ற போது, மத்திய அரசாங்கம் மாநிலங்களுக் காக சட்டங்களை உருவாக்க முடியும். மூன்றாவதாக, ஜனாதிபதியை பிரதிநிதித்துவம் செய்யும் மாநில ஆளுநர் மாநில அரசின் தலைவராக செயற்படுகின்றார்.

- உறுப்புரை 356 தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள விமர்சனம் யாதெனில், மத்தியில் ஆட்சியில் இருக்கும் கட்சி அரசியல் ரீதியான பகைமையை கொண்ட மாநில அரசாங்கங்களை கலைப்பதற்கானதொரு உபாயமாக இதை பயன்படுத்துகின்றது என்பதாகும். இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது ஏற்பட்ட அவசரகால நிலையின் போது மேற்குறிப்பிட்ட விடயம் இடம்பெற்றது. பஞ்சாப், கேரளா மற்றும் உத்தர பிரதேசம் ஆகியவற்றில் இந்நிலை ஏற்பட்டது.
- தூய சமஷ்டி அரசாங்க முறையில் அத்தகைய அவசரகால அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்திடம் காணப்படுவதில்லை. இங்கு மாநிலங்களின் சுயாதீனத்தன்மையினை அரசியலமைப்பில் உத்தரவாதப் படுத்தப்பட்டிருத்தல் கட்டாயமான பண்பொன்றாகும்.

- இந்தியா வேறுப்பட்ட ஒரு சமஷ்டி முறையினை தழுவிக்கொள்வதற்கு பிரித்தானியாவின் பிரித்தாளும் கொள்கையின் கசப்பான அனுபவங்கள் காரணமாகின. 1950 இல் ஆம் அரசியலமைப்பினை உருவாக் கும்போது இந்தியாவின் ஆள்புல ஒருமைப்பாடு, அரசியல் ஐக்கியத்தைப் பாதுகாக்கும் வகையில் அரச கட்டமைப்புகளை உருவாக்க வேண்டும் என்பது அரசியலமைப்பினை உருவாக்கியவர்களின் முக்கிய கரிசனையாக இருந்தது.

- இவ்வாறு இந்திய அரசியல் அமைப்பினை வரைந்தவர்கள் இக்குழப்பத்திற்கு தீர்வு காணவேண்டியிருந்தது. ஐக்கியப்பட்ட தேசத்தைப் பாதுகாத்துக்கொண்டு பிரமாண்டமான பன்மைத்துவத்தை முகாமை செய்ய வேண்டிய தேவையும் காணப்பட்டது.

- அந்தவகையில் இந்திய சமஷ்டியானது அரைகுறை சமஸ்டி என வாதிடப்படுவதற்கு காரணம் அது சாதாரண காலங்களில் ஒரு முழுமையான சமஷ்டியாகவும் அவசரகால நிலையின் போது ஒற்றையாட்சி அரசாங்கமாகவும் செயற்பட முடிவதற்கான வாய்ப்புகள் அரசியலமைப்பு ஏற்பாடுகளில் காணப்படுவதாகும்.

- இந்திய அரசியலமைப்பில் காணப்படும் ஏனைய ஒற்றையாட்சிப் பண்புகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

I. தனி அல்லது ஒற்றைக் குடியுரிமை
II. ஒத்தியங்கு பட்டியல் மத்திய அரசாங்கத்திற்கே பெரிதும் சாதகமாகக் காணப்படுகின்றது.
III. மாநிலங்களின் ஆள்புல எல்லைகளை தீர்மானிப்பதற்கான அதிகாரம் மத்திய அரசாங்கத்திடம் காணப் படுதல்.
IV. இருக்கின்ற மாநிலங்களுக்கு பெயர் சூட்ட, மாநிலங்களை உருவாக்க, மாற்ற மத்திய அரசாங்கத்திற்கு உரிமையுண்டு.
V. ராஜ்ஜிய சபா மூன்றில் இரண்டு பெரும்பான்மையில் சம்மதம் வழங்கும் போது மத்திய அரசாங்கம் மாநிலங்கள் தொடர்பான சட்டமியற்றும் இயலுமையைக் பெறும்.

**முடிவுரை** **(03 புள்ளிகள்)**

- பிரதான கலந்துரையாடலின் சுருக்கத்தையும் இந்திய சமஷ்டி மாதிரி ஒரு வகையான விசித்திரமான சமஷ்டிப் பண்புகளைக் கொண்டுள்ளது என்பதனை சுட்டிக்காட்டி முடிவுரையினை எழுத முடியும். இதன்படி அதிகாரப்பகிர்வில் சமஷ்டி மற்றும் ஒற்றையாட்சி ஆகிய பண்புகளையும் கொண்டுள்ளது. இறைமை அதிகாரத்தை மத்திய – மாநிலங்களுக்கிடையே பகிரவில்லை. மாநிலங்கள் எல்லா சந்தர்பங்களிலும் முழு அளவிலான சுயாட்சியை அனுபவிப்பதில்லை. குறிப்பாக, மாநிலங்களின் சுயாட்சி என்பது நிபந்தனை–களுக்கு உட்பட்டதாகும்.

**09. உலக அரசியலின் சமகால போக்குகள் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றன என்பதனை விளக்குக. (20 புள்ளிகள்)**

**நோக்கம்**

இவ்வினாவின் நோக்கமானது உலக அரசியலின் சமகால சர்வதேச அரசியலின் போக்குகள் குறித்த தெளிவையும், அதன் போக்குகள் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் எவ்வாறான தாக்கத்தினை செலுத்துகின்றது என்பது பற்றிய தெளிவையும் மதிப்பிடுவதே இவ்வினாவின் நோக்கமாகும்.

**அறிமுகம்** **(03 புள்ளிகள்)**

ஒரு நாட்டின் வெளியுறவுக்கொள்கையானது வெளிவாரியான மற்றும் உள்வாரியான காரணிகளால் தீர்மா–னிக்கப்படுகிறது. சர்வதேச சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்கள் சமகால உலகில் உள்ள நாடுகளின் வெளி யுறவுக் கொள்கையின் வடிவத்தை தீர்மானிப்பதில் செல்வாக்கு செலுத்துகின்றன. இது இலங்கைக்கும் பொருந்தக் கூடியது. இலங்கையின் வெளியுறவுக் கொள்கை சமகால பிராந்திய மற்றும் உலகளாவிய போக்குகளுக்கு ஏற்ப அதிகமாகவோ அல்லது குறைவாகவோ அதற்கு பதிலளிக்கிறது.

எவ்வாறாயினும் இந்த பதிலின் தன்மை நாட்டின் அரசியல், பொருளாதார திறன் மற்றும் உலக வரை படத்தில் இலங்கையின் புவிசார் அரசியல் முக்கியத்துவம் ஆகியவற்றால் தீர்மானிக்கப்படுகிறது.

**கலந்துரையாடல்** **(14 புள்ளிகள்)**

**தென்னாசியா**

- இந்து சமுத்திரத்தின் மையத்திலும், இந்தோ–பசிபிக் சமுத்திரங்களின் விளிம்பிலும் காணப்படு கின்ற இலங்கையின் புவிசார் அரசியல் அமைவிடம் உலக அதிகார சக்திகளுக்கு மகத்தான ஈர்ப்பை வழங்குகிறது.

- சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் வெளியுறவுக் கொள்கையினைத் தீர்மானிப்பதில் பிராந்திய அரசியல் போக்குகள் தாக்கம் செலுத்தியுள்ளன.

- பிராந்திய ஒத்துழைப்பையும், சார்க் ( பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம் ) என்ற பிராந்திய அமைப்பையும் வளர்ப்பதில் இலங்கை முக்கிய பங்கு வகித்தது. ஆயினும் பல்வேறு அரசியல் காரணங் களால், தெற்காசியாவின் பிராந்திய அமைப்பாக சார்க்கின் பலம் அண்மைக் காலமாக குறைவடைந்து வருகின்றது.

- இலங்கை மற்றய தெற்காசிய நாடுகளைப் போலவே பிராந்திய அரசியல் பொருளாதாரத்தில் இந்தியாவின் செல்வாக்குமிக்க வகிபங்கை எப்போதும் உணர்ந்திருக்கிறது. இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் விடயங்களை வடிவமைப்பதற்கான முக்கியமான காரணிகளாக இந்தியாவின் அரசியல் மற்றும் ஆட்சி மாற்றங்கள் மற்றும் இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளின் மாற்றங்கள் என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன.

**ஆசியா**

- உலக அரசியல் மற்றும் பொருளாதார வரைபடத்தின் தன்மையை தீர்மானிப்பதில் பல ஆசிய நாடுகள் அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக செல்வாக்கு செலுத்தியுள்ளதால் ஆசியாவில் முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளன. அதனால் சர்வதேச ரீதியாக ஆசியாவின் முக்கியத்துவம் விருத்தியடைந்து வருகின்றது. ஆசிய புவிசார் அரசியலில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இம்மாற்றங்களுக்கு ஏற்ப இலங்கையும் தமது வெளியுறவுக் கொள்கையின் மூலம் பதில் வழங்குகின்றது.

**இந்திய மற்றும் பசிபிக் சமுத்திரங்களின் அரசியல்**

- மத்திய கிழக்கு, ஆபிரிக்கா மற்றும் கிழக்கு ஆசியாவை ஐரோப்பா மற்றும் அமெரிக்காவுடன் இணைக்கும் முக்கிய கடல் பாதைகளில் இந்து சமுத்திரம் உள்ளது. இந்த முக்கியத்துவம் பிராந்தியத்தினுள் பல மூலோபாய பொருளாதார மற்றும் வர்த்தக செயற்பாடுகள் பலவற்றுக்கான தூண்டுதல்களை வழங்கியுள்ளன. ஆசிய கடலின் இந்த முன்னேற்றங்கள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டிய தேவை இலங்கை வெளியுறவுக் கொள்கை வகுப்பாளர்களுக்குக் காணப்படுகின்றது.

**உலகளாவிய அரசியல்**

**சர்வதேச அதிகார சமநிலை**

- தற்போதைய பல் துருவ அதிகார சமநிலையின் தன்மை இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை தீர்மானிப்பதில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உலகளாவிய ரீதியில் பல அதிகார சக்திகள் இருப்பதால், (உதாரணம்: அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், பிரிக்ஸ் (BRICS), சீனா, இந்தியா) அண்மைக் கால வெளியுறவுக் கொள்கை பெரும்பாலும் ஒருவகையான அதிகார சமநிலைக்கு உட்பட்டுள்ளது.

**கருத்தியல் அடிப்படையிலான அரசியல்**

- சுதந்திரத்திற்குப் பின்னரான முதல் மூன்று தசாப்தங்களில் இலங்கையின் வெளியுறவுக் கொள்கையின் தெளிவான விடயமொன்றாக அணிசேரா கொள்கையாக இருந்தது. ஆயினும், பனிப்போருக்கு பிந்திய காலகட்டத்தில் இருதுருவ அதிகாரச் சமநிலையின் வீழ்ச்சி அணிசேராக் கொள்கைகளுக்கு சவாலாக அமைந்தது. தாராள ஜனநாயகம் உலகின் மேலாதிக்க கருத்தியல் நிலைப்பாடாக மாறியுள்ளதால், சிறிய அரசுகளின் வெளியுறவுக் கொள்கை இன்னும் மேற்கு நோக்கிய நிலைப்பாட்டிற்கு மாற்றமடைந்துள்ளது. இந்த போக்கு இலங்கையின் வெளியுறவுக் கொள்கையிலும் காணப்படுகிறது.

**சர்வதேச அரசியல் பொருளாதாரம்**

- சமகால உலக அரங்கில் நவ தாராளவாத பொருளாதார மற்றும் அரசியல் கருத்துக்கள் முக்கியம் பெறுகின்றன. இதனால் இதற்குச் சமாந்தரமாக பொருளாதார இராஜதந்திரம் இலங்கையின் அண்மைய வெளியுறவுக் கொள்கையின் மிகவும் முக்கியமான கருத்தியலாக மாறியுள்ளது.

**மாற்று சர்வதேச இயக்கங்கள் மற்றும் வலைப்பின்னல்கள்**

- தற்போதைய உலக சூழலில் பிரதான செயற்பாட்டாளர்களுக்கு அப்பால் தாக்கம் செலுத்தும் மாற்று

சர்வதேச இயக்கங்கள் மற்றும் வலையமைப்புகள் பல வளர்ச்சியடைந்திருப்பதைக் காண முடிகின்றது. பயங்கரவாதம், மத அடிப்படைவாதம், குழு உரிமை இயக்கங்கள் (உதாரணம்: LGBT இயக்கங்கள், Yellow Vest போன்ற தொழிலாளர் இயக்கங்கள்), எதேச்சதிகார ஆட்சிகளை அகற்றுவதை நோக்கமாகக் கொண்ட புதிய சமூக இயக்கங்கள் போன்றன இதற்கான உதாரணங்களாகும். உள்வாரியான பொதுசன அபிப்பிராயம் சிலவேளைகளில் இதற்கு எதிராகக் காணப்பட்டபோதும் அவற்றின் விருத்தியோடு ஒப்பிடும்போது அரசின் வெளிநாட்டுக் கொள்கையினை ஒழுங்கமைப்பதில் இலங்கை கவனம் கொள்ள வேண்டியுள்ளது.

**முடிவுரை** **(3 புள்ளிகள்)**

- உலக அரசியலில் மிகவும் நெருக்கமான நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுகின்றது. இது போன்ற உலகளாவிய தொடர்புகளில் இலங்கை தனது கால்த்தடங்களை பதிக்கும் கருவியாக வெளியுறவுக் கொள்கை காணப்படுகின்றது. வெளியுறவுக் கொள்கை ஒரு நாட்டின் உள்வாரியான கொள்கையின் விஸ்தரிப்பாக அடையாளம் காணப்பட்டாலும் சமகால சர்வதேச சூழலின் உலகமயமாக்கப்பட்ட தன்மை வெளியுறவுக் கொள்கையை தீர்மானிப்பதில் சர்வதேச போக்குகளுக்கு அதிக முக்கியத்துவத்தை ஏற்படுத்தியுள்ளது.

- உலக அரசியல் அதிகாரத்தில் அரசியல் மற்றும் பொருளாதார கருத்தியல் நிலைப்பாடுகள் வெளியுறவுக் கொள்கைக்கு குறிப்பாக சிறிய அரசுகளுக்கு உள்ளீடுகளை வழங்குவதில் செல்வாக்கு செலுத்துகின்றன. இந்த யதார்த்தம் இலங்கைக்கும் பொதுவானது. அத்துடன் உலக அரங்குகளில் அதனது பிரதிநிதித்துவம் அந்த கருத்தியல் காரணிகளால் பாதிக்கப்படுகிறது.

**வினா இல 10**

**பின்வரும் தலைப்புகளில் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்புகள் எழுதுக.**

(i) **தேசியவாதம்**
(ii) **மதச்சார்பின்மைவாதம்**
(iii) **முரண்பாட்டு முகாமைத்துவம்**
(iv) **சிவில் சமூகம் என்ற எண்ணக்கருவின் பொருள்**
(v) **அதிகாரம் பற்றிய பெண்ணியவாதிகளின் நோக்கு** **( 10 x 2 = 20 புள்ளிகள்)**

(i) **தேசியவாதம்** **(10புள்ளிகள்)**

**நோக்கம்:**

இந்த தலைப்பு ஒரு அரசியல் கருத்தியல் என்ற வகையில் தேசியவாதம் பற்றியும் அரசியலின் ஒரு விடயப்பரப்பு என்ற வகையில் அதனுடைய முக்கியத்துவத்தினைப் பற்றியும் மாணவர்களின் அறிவையும் புரிதலையும் மதிப்பிடுவதற்காக வழங்கப்பட்டுள்ளது.

**அறிமுகம்** **(02புள்ளிகள்)**

அரசு, அரசியல் நிறுவனங்கள், பொதுக் கொள்கைகள் மற்றும் அரசியல் போராட்டங்களை ஒழுங்கமைப்பதற்கான ஒரு அடிப்படையை வழங்குகின்ற ஒரு பிரதான கருத்தியலாக தேசியவாதம் காணப்படுகிறது என்று இதற்கான விடையை ஆரம்பிக்கலாம். மேலும் தேசியவாதம் நவீன தேசிய அரசிற்கான அடிப்படையையும் வழங்கியுள்ளது.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- ஒரு கருத்தியலாக தேசியவாதம் முதன்முதலில் ஐரோப்பாவில் பதினெட்டாம் நூற்றாண்டில் அபிவிருத்தியடைந்தது. அது பின்னர் ஐரோப்பிய காலனித்துவங்களுக்கு பரவியது.

- சுருக்கமாக வரையறுக்கின்ற போது தேசியவாதம் என்பது ஒரு குறிப்பிட்ட புவியியல் பகுதியில் வாழும் மக்கள் தங்களை கலாசார மற்றும் அரசியல் அடிப்படையில் தேசம் என்று அழைக்கப்படும் ஒரு பெரிய அலகாக கருதுகின்றனர். ஒரு கருத்தியலாக இது மனித சமூகங்களுக்கு ஒரு தேசத்தைச் சார்ந்திருப்பது பற்றிய உணர்வை வழங்கியது.

- மேலும் ஒரு தேசத்தைச் சேர்ந்த மக்களுக்காக அவர்கள் இணைந்த அடையாளங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்றும் தேசியவாதம் குறிப்பிடுகின்றது. கலாசாரம், மொழி, மதம், இணைந்த நிலப்பரப்பு மற்றும் தாயகம் ஆகியவை 'தேசிய அடையாளத்தின்' முக்கிய குறியீடுகள் ஆகும்.

- ஐரோப்பாவில் 1789 ஆம் ஆண்டு பிரான்சிய புரட்சிக்குப் பின்னர் இடம்பெற்ற நவீன தேசிய–அரசு உருவாக்கம், அரசின் எல்லைப் பரப்பினுள் உள்ள அனைத்து குடியுரிமையாளர்களுக்குமான இணைந்த கலாசாரம் மற்றும் அடையாளத்தைக் கொண்ட ஒரு ஒருங்கிணைந்த அரசியல் சமூகம் என்ற வகையில் தேசம் என்ற கருத்தால் ஈர்க்கப்பட்டது.

- ஒரு அரசியல் கருத்தியலாக தேசியவாதம் பின்வரும் வகிபங்குகளை வகிக்கிறது:

(i) இது ஒரு தேசிய அரசுக்குள் ஒழுங்கமைக்கப்பட்ட மக்களுக்கு ஒரு அரசியல் சமூகமாக ஒரு பொதுவான அடையாளத்தையும் ஒரு சமூகத்தை சார்ந்தது என்ற உணர்வையும் தருகிறது. ஒரு தேசமாக தங்களைப் பற்றி சிந்திப்பதற்கான கருத்தியல் மற்றும் எண்ணக்கரு ரீதியான கட்டமைப்பை தேசியவாதம் அவர்களுக்கு வழங்குகின்றது.

(ii) தேசியவாதம் மேலும் மக்களுக்கு இணைந்த அடையாளங்களுடன் அரசியல் செயற்பாடுகளுக்கான நோக்கு மற்றும் வழிகாட்டுதலையும் வழங்கியுள்ளது. உதாரணமாக, காலனித்துவ உலகில் மக்கள் ஒரு சுதந்திர தேசத்திற்கான நோக்கு மற்றும் தேசியவாதக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டு 'விடுதலை' அல்லது 'சுதந்திரப்' போராட்டங்களை மேற்கொண்டனர்.

(iii) தேசியவாதம் என்பது பல்லினங்களைக் கொண்ட தேசிய அரசுகளுக்குள் வாழும் சிறிய இனக் குழுக்களுக்கான ஒரு கருத்தியலாகவும் மற்றும் அரசியல் நோக்காகவும் காணப்படுகின்றது. தேசம் என்ற கருத்தால் ஈர்க்கப்பட்ட அவர்கள் பெரும்பாலும் தாங்கள் ஓரங்கட்டப்பட வேண்டிய சிறுபான்மையினர் அல்ல, மாறாக சமமான அரசியல் மற்றும் ஏனைய உரிமைகளைக் கொண்ட 'தேசங்கள்' என்பதைக் குறிப்பிடுகிறார்கள்.

(iv) நவீன தேசிய அரசின் அடித்தளக் கொள்கைகள் தேசியவாத கருத்தியலை அடிப்படையாகக் கொண்டவையாக காணப்படுகின்றன. தேசிய இறையாண்மை, தேசிய சுதந்திரம், பிராந்திய ஒற்றுமை, கலாசார ஒற்றுமை மற்றும் குடியுரிமை ஆகிய எண்ணக்கருக்கள் அடிப்படையில் தேசம் பற்றிய நவீன கருத்தியல்களின் செல்வாக்கிற்கு உட்பட்டிருக்கின்றன.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

- நவீன அரசியலில் பல்வகையிலான பாத்திரங்களை வகிக்கும் தேசியவாதத்தின் தொடர்ச்சியான வகிபங்கை எடுத்துக்காட்டுவதன் மூலம் இந்த விடை முடிவுக்கு வரலாம். அரசியலில் தேசியவாதம் தொடர்ந்தும் ஒரு முக்கியமான வகிபங்கினை வகிக்கின்றது என்பதை இலங்கையுடன் தொடர்புபடுத்தியும் அவதானித்திருக்கலாம்.

- தேசியவாதத்தின் அத்தகைய அரசியல் வகிபங்குகளில் உள்ளடங்குவன
  (அ) தேசம் மற்றும் அரசிற்கான ஒரு கருத்தியல்
  (ஆ) தங்களுக்கு ஒரு இணைந்த அரசியல் விதி இருகின்றது என்ற உணர்வோடு ஒன்றாக இருக்க வேண்டும் என்ற நோக்கு ஒரு அரசியல் சமுதாயத்தின் உறுப்பினர்களுக்கு காணப்படுதல்
  (இ) ஒரு பொதுவான தேசத்திற்கான ஒரு கட்டமைப்பு மற்றும்
  (ஈ) அரசியல் செயற்பாடுகளுக்கான வழிகாட்டி. தேசிய மற்றும் உலக அரசியலில் தேசியவாதம் வகிக்கும் முக்கிய வகிபங்கை கருத்திற் கொள்ளாமல் நவீன அரசி யலை சரியாக புரிந்து கொள்ள முடியாது என்பதனை முடிவுரையில் முன்வைக்கலாம்.

## (ii) மதச்சார்பின்மைவாதம் (10 புள்ளிகள்)

**நோக்கம்:**

அரசியலில் மதம் வகிக்கும் வகிபங்கு மற்றும் மதச்சார்பின்மைவாத எண்ணக்கரு பற்றிய பரீட்சார்த்தியின் அறிவையும் புரிதலையும் பரிசோதிக்க இந்த தலைப்பு முயல்கிறது. மதச்சார்பின்மைவாத எண்ணக்கரு வின் தோற்றம், அதன் தாராளவாத மற்றும் சோசலிச எண்ணக்கருவாக்கங்கள் மற்றும் மதச்சார்பின்மை–வாத எண்ணக்கருவின் மேலதிக அபிவிருத்திக்கான இந்திய பங்களிப்பு பற்றிய அறிவையும் இந்த விடை விளக்க வேண்டும்.

**அறிமுகம் (02 புள்ளிகள்)**

சமகால உலகில் இலங்கையின் அரசியலிலும் மதம் ஒரு முக்கிய கருப்பொருளாக காணப்படுகின்றது என்று குறிப்பிட்டு விடையைத் தொடங்கலாம். மதச்சார்பின்மை என்பது மதத்திற்கு எதிரான வாதம் அல்ல. மாறாக, மதமும் அரசியலும் கலக்கக் கூடாது என்பதே அதன் மையக் கருத்தாகும்.

**கலந்துரையாடல் (06 புள்ளிகள்)**

- மதச்சார்பின்மைவாத எண்ணக்கருவின் தோற்றம் 18 மற்றும் 19 ஆம் நூற்றாண்டுகளில் ஐரோப்பாவில் காணப்பட்டது.

- மேலும் இது ஐரோப்பிய அறிவொளி சிந்தனையின் ஒரு பகுதியாகவும் இருந்தது. எனவே இது தாராண்மை–வாதம் மற்றும் சோசலிசத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கத்தோலிக்க திருச்சபைக்கும் அரசுக்கும் இடையிலான 'புனிதமற்ற' கூட்டணிக்கு எதிராக போராடியவர்களிடையே முதலில் இது ஒரு கருத்தியலாக வெளிப்பட்டது.

- ஐரோப்பாவில் மதச்சார்பின்மை தோன்றுவதற்கான மற்றொரு ஆதாரமாக திருச்சபையினால் சமூகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட அறிவுசார் ஆதிக்கத்திற்கு எதிரான எதிர்ப்பு காணப்படுகின்றது. இந்த போராட் டங்கள் திருச்சபையினால் நிர்வகிக்கப்படும் மதக் கோட்பாடுகளுக்கு எதிரான காரணத்தை வலியுறுத்தின.

- இந்த போராட்டங்கள் மதச்சார்பின்மையின் தாராண்மைவாத மற்றும் சோசலிச கோட்பாடுகளுக்கு உத் வேகம் அளித்தன. இரண்டும் திருச்சபையையும் அரசையும் பிரிக்க வேண்டும் என்று வாதிட்டன.

- தாராண்மைவாத மதச்சார்பின்மைவாதத்தின் முக்கிய மூலக் கொள்கைகள்:
  (i) திருச்சபையையும் அரசையும் நிறுவன ரீதியாகப் பிரித்தல்.
  (ii) அரசு எந்த மதத்துடனும் தன்னை அடையாளப்படுத்திக் கொள்ளக்கூடாது.
  (iii) மதத்தைப் பரப்புவதிலோ கற்பிப்பதிலோ அரசு ஈடுபடக்கூடாது.
  (iv) அரசு எந்த மதத்துடனும் தன்னை இணைத்துக் கொள்ளக்கூடாது.
  (v) மத சுதந்திரம் குடியுரிமையாளர்களின் அடிப்படை உரிமையாக இருக்க வேண்டும்.
  (vi) எந்தவொரு குடியுரிமையாளனும் மதத்தின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படக்கூடாது.

- சோசலிச மதச்சார்பின்மைவாதத்தின் முக்கிய மூலக் கொள்கைகள்:
  (i) அரசு முற்றிலும் மதத்திலிருந்து பிரிக்கப்பட வேண்டும். அது ஒரு மதச்சார்பற்ற அரசாக இருக்க வேண்டும்.
  (ii) அரசின் அனுமதியுடன் மட்டுமே மதம் இருக்க முடியும்.
  (iii)மத நிறுவனங்கள் அரசுக்கு அச்சுறுத்தலாக இல்லாத வரைக்கும் மட்டுமே அவை இருக்க முடியும். அத்துடன் அவை செயல்பட அனுமதி அவசியமாகும்.
  (iv) அரசியல் அல்லது குடியுரிமைச் சங்கம் மத அடையாளத்தின் அடிப்படையில் இருக்கக்கூடாது.

- தாராண்மைவாத மற்றும் சோசலிச மதச்சார்பின்மைவாதம் ஐரோப்பாவில் இருந்து தோற்றம் பெற்றவை. எனவே அவை ஐரோப்பாவின் வரலாற்று அனுபவத்தை பிரதிபலிக்கின்றன. இந்தியாவில் மதச்சார்பின்மை-வாதத்திற்கு இன்னொரு பாரம்பரியம் காணப்படுகின்றது. இது இலங்கைக்கு மிகவும் பொருத்தமானது.

- நவீன இந்திய மதச்சார்பற்ற சிந்தனை பௌத்தம், இந்து மதம், சமண மதம், மன்னர் தர்மசோகாவின் சிந்தனை மற்றும் நவீன இந்து சிந்தனையாளர்களான இராமகிருஷ்ண பரமஹம்-சர் மற்றும் சுவாமி விவேகானந்தர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு உள்வாங்கப்பட்டுள்ளது. சர்வபள்ளி சேர். ராதாகிருஷ்ணன், ஜவஹர்லால் நேரு, ராஜேந்திர பிரசாத் ஆகியோர் அதன் முக்கிய அரசியல் சிந்-தனையாளர்களாக காணப்பட்டனர்.

- இந்திய மதச்சார்பின்மைவாதத்தின் முக்கிய மூலக் கொள்கைகள்:

(i) தர்ம நிரபேக்ஷதா (Dharma Nirapekshatha) – அனைத்து மதங்களுக்குமான அரசின் நடுநிலைமை
(ii) சர்வ தர்ம சம்பாவதா (Sarva Dharma Samabhavatha ) –அனைத்து மதங்களையும் சமமாக நடத்துதல் மற்றும் அனைத்து மதங்களையும் சமமாக ஏற்றுக்கொள்ளுதல்.
(iii)மத அடையாளத்தை கருத்தில் கொள்ளாமல் அரசு அனைத்து நபர்களையும் சமமாக நடத்த வேண்டும்.
(iv)குடியுரிமை வழங்குவதில் மதம் ஒரு அளவுகோலாகவோ அல்லது தடையாகவோ இருக்கக்கூடாது.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

மதச்சார்பின்மைவாத எண்ணக்கரு மதத்திற்கும் அரசுக்கும் இடையிலான உறவை நடுநிலையான முறையில் மறுவரையறை செய்கிறது என்பதை சுட்டிக்காட்டும் முக்கிய விவாதத்தை இந்த முடிவுரையில் சுருக்கமாகக் குறிப்பிடலாம். மதச்சார்பின்மைவாதம் என்பது மதத்திற்கு எதிராக இருப்பதற்கான ஒரு வாதம் அல்ல. மதம் சமூகத்துடன் ஈடுபடக்கூடாது என்றும் அது குறிப்பிடவில்லை. எந்தவொரு மதத்தையும் பாகு-பாடில்லாமல் நம்புவதற்கும் பின்பற்றுவதற்குமுள்ள மக்களின் உரிமையைப் பாதுகாக்கும் அதே வேளை-யில் மதங்களுக்கான அரசின் நடுநிலைமையையும் அது வலியுறுத்துகின்றது. மேலும் மதமும் அரசியலும் தனித்தனி பகுதிகளாக இருக்க வேண்டும் என்றும் அது வாதிடுகிறது.

இந்திய மதச்சார்பின்மைவாத எண்ணக்கரு இலங்கைக்கும் நவீன உலகத்துக்கும் அதிகம் பொருத்தமாக வுள்ளது என்பதைக் குறிப்பிடுவதன் மூலம் விடை முடிவுக்கு வரலாம்.

(iii) **முரண்பாட்டு முகாமைத்துவம்** **(10 புள்ளிகள்)**

**நோக்கம்:**

இந்த விடை பரீட்சார்த்திகளின் முரண்பாட்டு தீர்வுச் செயல்முறையின் பரிச்சயத்தையும் முரண்பாட்டு முகாமைத்துவம் என்ற எண்ணக்கருவின் புரிதலையும் பரீசிலனை செய்ய விரும்புகிறது.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

முரண்பாட்டு தீர்வு பொதுவாக ஒரு நீண்ட மற்றும் கடினமான செயல்முறையாகும். தனிநபர், சமூக மற்றும் அரசியல் முரண்பாடுகளிலும் இதனைக் காணலாம். ஒரு முரண்பாட்டிற்கான முழுமையான தீர்வு கடினமானது என்றாலும் ஒரு முரண்பாட்டினை நேர்மறையாக அணுகவும் கையாளவும் வேறு வகையான வழி முறைகள் காணப்படுகின்றன. முரண்பாட்டின் தீவிரத்தையும் முரண்பாட்டின் விரிவாக்கத்தையும் குறைக்க முயல்கின்ற முரண்பாட்டிற்கான இத்தகைய நேர்மறையான அணுகுமுறைகளில் ஒன்றாக முரண்பாட்டு முகாமைத்துவம் காணப்படுகின்றது.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- முரண்பாட்டு தீர்வுக்கான வேறுபட்ட நேர்மறையான அணுகுமுறைகளை சுருக்கமாக விவரிப்பதன் மூலம் கலந்துரையாடலை ஆரம்பிக்கலாம். அவை பின்வருமாறு:
  - (i) முன்னெச்சரிக்கை செய்தல்: சமூகத்தில் ஏற்படக்கூடிய முரண்பாடுகள் அவை தோன்றுவதற்கு முன்பு அடையாளம் காணப்படுதல். முரண்பாட்டின் அறிகுறிகள் தென்படும்போது ஆரம்ப கட்டத்தில் அவை உருவாகாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க இது உதவுகிறது.
  - (ii) முரண்பாட்டைத் தவிர்த்தல்: முன்கூட்டிய எச்சரிக்கை வழிமுறைகள் மூலம் சாத்தியமான முரண் பாட்டைக் கண்டறிந்த பின்னர் அவை உருவாகி வளர்வதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கின்றன.
  - (iii) முரண்பாட்டு முகாமைத்துவம்: முரண்பாடு உருவாகியவுடன் அதன் பரப்பை கட்டுப்படுத்துவதும் மற்றும் அது பரவுவதைத் தடுப்பதும் ஆகும்.
  - (iv) முரண்பாட்டு நிலைமாற்றம்: முரண்பாடுகள் அதன் குறிக்கோள்கள், விதிகள், கட்டமைப்புகள் மற்றும் நிகழ்ச்சி நிரலை நிலைமாற்றுவதன் மூலம் அதனைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கின்றன.
  - (v) முரண்பாட்டுக்கு பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்: முரண்பாடொன்று ஒருதரப்பு ஒரு தலைப்பட்சமாக வெற்றிபெறுவதன் மூலமாகவோ அல்லது சமாதான உடன்படிக்கை மூலமாகவோ முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் மீண்டும் முரண்பாடு ஏற்படுவதைத் தடுக்க நடவடிக்கை எடுப் பதாகும்.

- விடையின் அடுத்த கட்டம் முரண்பாட்டு முகாமைத்துவம் என்றால் என்ன என்பதை விபரிக்கின்றது மற்றும் முரண்பாட்டு தீர்வின் நோக்கங்களுடன் அதை ஒப்பிடுகின்றது.

- முரண்பாட்டு முகாமைத்துவ எண்ணக்கரு இரண்டு விதமான கருத்துக்களை கொண்டிருக்கின்றது.
  - (i) ஒரு முரண்பாட்டின் தீர்வு கடினமான மற்றும் நீண்டகால பணியாக இருக்கும்போது, அதன் பரவல் மற்றும் தீவிரத்தைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அணுகுமுறை முரண்பாட்டின் மூல காரணங்களைப் பற்றி குறிப்பிடவில்லை. இந்த அணுகுமுறை முரண்பாட்டினை ஒரு எதிர்மறையான மற்றும் அழிவு தரும் நிகழ்வாகக் கருதுகிறது. இதனால் இது கட்டுப்படுத்தப்பட்டு அதன் எதிர்மறை யான விளைவுகளை நடுநிலையாக்க முகாமை செய்யவேண்டும்.
  - (ii) இரண்டாவது கருத்து முரண்பாட்டினை ஒரு எதிர்மறையான விடயமாக கருதவில்லை. இது முரண் பாட்டினை ஒரு நேர்மறையான விடயமாக பார்க்கிறது. முரண்பாடு என்பது தீர்வு காணப்படவேண்டிய சமூக குறைபாடுகளின் வெளிப்பாடாக அல்லது தற்போதைய முறைமையில் உள்ள குறைபாடுகளின் வெளிப்பாடாக காணப்படுகின்றது. கலந்துரையாடல்கள், பேச்சுவார்த்தைகள், உரையாடல்கள், சமாதான உடன்படிக்கைகள் போன்ற ஜனநாயக மற்றும் சமாதான வழிமுறைகளின் மூலம் முரண்பாட்டின் பாதையை மீள இயக்க வேண்டும் என்று இது அறிவுறுத்துகின்றது.

- முரண்பாட்டு முகாமைத்துவத்தின் இந்த இரண்டு கருத்துக்களும் மற்றும் அவை முன்வைக்கும் இரண்டு அணுகுமுறைகளும் முரண்பாட்டினை வன்முறையாக வளர்வதில் இருந்தும் படிப்படியாக ஒரு அழிவு தரும் நெருக்கடியாக வளர்வதில் இருந்தும் தடுப்பதை எதிர்பார்க்கின்றன.

- முரண்பாட்டு முகாமைத்துவத்தினை முரண்பாட்டு தீர்வுடன் ஒப்பிடுவது முரண்பாட்டு முகாமைத்துவத்திற்கு ஒரு வரையறுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரல் மற்றும் வரையறுக்கப்பட்ட குறிக்கோள்கள் உள்ளன என்பதைப் புரிந்துகொள்ள உதவுகிறது. முரண்பாட்டு தீர்வுக்கு முரண்பாட்டின் மூல காரணங்களை இல்லாமல் செய்து அது மீண்டும் நிகழாமல் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இது ஒரு பெரிய நிகழ்ச்சி நிரலைக் கொண்டுள்ளது. இதற்கு சமாதான உடன்படிக்கைகள் மற்றும் முரண்பாட்டினை முடிவுக்குக் கொண்டு வருவது மட்டுமன்றி முரண்பாட்டுக்கு பின்னரான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு நீண்ட செயல்முறையும் தேவைப்படுகிறது. முரண்பாடு அதிகரிப்பதற்கு முரண்பாட்டு முகாமைத்துவம் அனுமதிக்காது. அது அமைதியான மற்றும் ஜனநாயக வழிமுறைகள் மூலம் அதன் தீவிரத்தை முகாமை செய்ய முயற்சிக்கிறது.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

மேலுள்ள கலந்துரையாடலை சுருக்கமாகக் கூறுவதன் மூலமும் முரண்பாட்டு முகாமைத்துவம் என்பது தனிப்பட்ட மற்றும் சமூக மோதல்களைக் கையாள்வதற்கான குறைந்த செலவுள்ள அணுகுமுறை என்பதை சுட்டிக்காட்டுவதன் மூலமும் முடிவுரையை தொடங்கலாம். முரண்பாடுகளை அதிகரிப்பதற்கும் அழிவு-கரமான விளைவுகளை ஏற்படுத்துவதற்கும் அனுமதிப்பதை விட அவற்றை முகாமை செய்வது எப்போதும் நன்மையானதாகும். ஒரு முரண்பாடு அந்த கட்டத்தை அடைகின்ற பொழுது அதனை முகாமை செய்வதும் கடினமாகும்.

(iv) **சிவில் சமூகம் என்ற எண்ணக்கருவின் பொருள்** **(10 புள்ளிகள்)**

**நோக்கம்:**

'சிவில் சமூகம்' என்ற எண்ணக்கருவின் கோட்பாட்டு அடிப்படையைப் பற்றி பரீட்சார்த்திகள் எந்தளவிற்கு புரிந்து கொள்கிறார்கள் என்பதை மதிப்பீடு செய்ய இந்த தலைப்பு முயற்சிக்கின்றது.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

குடியுரிமையாளர்கள் தங்கள் பொதுவான நலனுக்காகவும் குறிக்கோள்களுக்காகவும் கூட்டாக ஒன்றிணையும் சமூக பரப்பே 'சிவில் சமூகம்' என்ற அடிப்படை வரைவிலக்கணத்துடன் தொடங்கலாம். சிவில் சமூகத்தில் பிரஜைகளின் செயற்பாடு நவீன அரசியலின் ஒரு முக்கிய அம்சமாகும் என்றும் அது குறிப்பிடலாம். இது நவீன ஜனநாயகக் கோட்பாட்டிலும் ஒரு முக்கியமான எண்ணக்கருவாகும்.

**கலந்துரையாடல்** **(06 புள்ளிகள்)**

- சிவில் சமூகம் வரலாற்று ரீதியாக நான்கு எண்ணக்கரு சார்ந்த விளக்கங்களைக் கொண்டுள்ளது: மரபுரீதியான தாராண்மைவாதம், மரபுரீதியான மார்க்சிசம், இணக்கப்பாட்டு ஜனநாயகம் மற்றும் நவ-மார்க்சிய கிராம்சியன் என்பனவாகும்.

  (i) மரபுரீதியான தாராண்மைவாத கருத்து: சிவில் சமூகம் என்பது அரசுக்கும் குடும்பத்துக்கும் இடையிலான சமூக பரப்பாகும். இம்மானுவேல் கான்ட் மற்றும் ஹெகல் ஆகியோர் அதன் முக்கிய சிந்தனையாளர்களாக காணப்படுகின்றனர். மேலும் தனிநபர் சுதந்திரம் தொடங்கி செழித்து வளரும் முதலாளித்துவ சந்தையின் களமே சிவில் சமூகம் என்று ஹெகல் குறிப்பிடுகின்றார்.

(ii) மரபுரீதியான மார்க்சிசக் கருத்து: முதலாளித்துவ சந்தையே சிவில் சமூகம் என்ற ஹெகலின் கரு-த்தைப் பயன்படுத்தி கார்ல் மார்க்ஸ் இந்த கருத்தை உருவாக்கியிருக்கிறார். ஆயினும் சிவில் சமூகம் மனித சுதந்திரத்திற்கான பரப்பல்ல என்று கடுமையாக வாதிடுவதை அவர் விமர்சித்தார். மார்க்ஸ் முதலா ளித்துவம் மற்றும் முதலாளித்துவ சந்தையை கடுமையாக விமர்சித்தார். சந்தை போட்டியின் மூலம் மனிதர்களின் சுயநலனை வெளிப்படுகின்றனர் எனக் குறிப்பிட்டார். இவ்வாறு சிவில் சமூகத்தில் தனிநபர்கள் தங்களை தனிமையான மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட மனிதர்களாகக் காண்கிறார்கள் என்றும் உண்மையான மனிதத் திறனை இங்கு அடைய முடியவில்லை என்றும் குறிப்பிடுகின்றார்.

(iii)இணக்கப்பாட்டு ஜனநாயகத்திற்கான பரப்பு என்றவகையில் சிவில் சமூகம்: இந்த கருத்தின் படி, குடியுரிமை யாளர்களின் பொதுவான தேவைகளைப் பூர்த்தி செய்ய குடியுரிமையாளர்கள் தங்களை அரசு மற்றும் அரசாங்கத்திலிருந்து சுயாதீனமாக ஒழுங்கமைத்துக் கொள்ளும் பரப்பு சிவில் சமூகம் ஆகும். அவர்கள் பல்வேறு குடியுரிமையாளர்களின் அமைப்புக்கள் அல்லது சங்கங்களை அமைப்ப-தன் மூலம் இதைச் செய்கிறார்கள். இந்த கருத்தை தனது இணக்கப்பாட்டு ஜனநாயக எண்ணக்கருவில் பிரான்சிய அரசியல் சிந்த னையாளரான அலெக்ஸ் டி டொக்வில் முதன் முதலில் வெளிபடுத்தினார்.

(iv)சிவில் சமூகம் அரசு மற்றும் அரசாங்கத்திற்கு வெளியே குடியுரிமையாளர்களின் ஜனநாயக அரசியல் செயல்பாட்டிற்கான பரப்பாக சமகாலத்தில் அர்த்தம் கொள்ளப்படுகின்றது. எந்தவொரு சமூகத்திலும் தொழிற்சங்கங்கள், தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர் குழுக்கள் மற்றும் குடியுரிமையாளர்க-ளின் சமூக இயக்கங்கள் ஆகியவை அரசாங்கத்திடமிருந்து கோரிக்கைகளை முன்வைப்பதற்காக போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுகின்றன. இவ்வாறு சிவில் சமூகம் என்பது அரசிற்கு வெளியே குடியுரிமையாளர்களின் சுயாட்சிக்கான சமூக பரப்பாகவும் வரையறுக்கப்படுகிறது. சிவில் சமூக செயல்பாடுகள் ஜனநாயக அரசியல் வாழ்க்கையின் ஒரு அம்சமாக கருதப்படுகிறது. அத்தகைய செயற்பாடுகள் சமகால அரசியல் கோட்பாட்டில் 'சிவில் சமூக அரசியல்' என்று விவரிக்கப்படுகின்றது.

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

மேற்கண்ட விவாதத்தை சுருக்கமாகக் கூறுவதன் மூலமும், வரலாற்று நிலைமைகளுக்கு ஏற்ப சிவில் சமூகத்தின் கருத்தாக்கங்கள் வளர்ச்சியடைந்துள்ளன என்பதையும், நவீன ஜனநாயகக் கோட் பாட்டில் சிவில் சமூகக் கருத்து ஒரு முக்கிய எண்ணக்கருவாகும் என்பதையும் சுட்டிக்காட்டுவதன் மூலம் விடை முடிக்கலாம். சமகால அரசியல் கோட்பாட்டில் சிவில் சமூகம் அதன் கூட்டுறவு அர்த்தத்திலும் மற்றும் குடியுரிமையாளர்களின் ஜனநாயக அரசியல் செயல்பாட்டிற்கான பரப்பாகவும் வரையறுக்கப்படு கிறது.

(v) **அதிகாரம் பற்றிய பெண்ணியவாதிகளின் நோக்கு** **(10 புள்ளிகள்)**

**நோக்கம்:**

இந்த கேள்வியின் நோக்கம் அதிகாரத்தைப் பற்றிய பெண்ணிய நோக்கு தொடர்பான மாணவர்களின் புரிதலையும், அதிகாரத்தையும் அரசியலையும் பகுப்பாய்வு செய்வதில் அவர்களின் பங்களிப்பை மதிப் பிடுவதுமாகும். இது பெண்ணிய அரசியல் கோட்பாட்டின் அடிப்படைகளுடன் மாணவர்களின் பரிச்சயத் தையும் மதிப்பிடுகிறது.

**அறிமுகம்** **(02 புள்ளிகள்)**

அரசியல் விஞ்ஞானத்தில் அதிகாரம் பற்றிய கோட்பாடுகளில் மரபுரீதியான அணுகுமுறைகளை பெ-ண்ணியக் கோட்பாடு விமர்சித்ததுடன் மனித சமுதாயத்தில் அதிகாரம் மற்றும் அதன் நடைமுறை குறித்த முற்றிலும் புதிய நோக்கை அறிமுகப்படுத்தியது. பெண்ணிய அரசியல் கோட்பாடு அதிகாரத்தின் எண்ணக்-கருவாக்கம் மற்றும் நிறுவனமயமாக்கம் ஆகிய இரண்டும் ஆண்-மையக் கண்ணோட்டத்தில் கட்டமைக்கப்

பட்டுள்ளன என்று வாதிடுகிறது. ஆகவே, பெண்ணியவாதம் பால்நிலை நோக்கில் அதிகாரத்தைப் பற்றிய புரிதலை முன்மொழிந்துள்ளது. இந்த விடை பரீட்சார்த்திகள் அதிகாரம் தொடர்பாக பால்நிலை அடிப்படை யிலான அணுகுமுறையின் அடிப்படை அம்சங்களை அறிந்திருக்கிறார்கள் என்பதை விளக்க வேண்டும். அதிகாரம் பற்றிய பெண்ணியக் கோட்பாடு அரசியல் பற்றிய பெண்ணியக் கோட்பாட்டுடன் தொடர்புபட் டுள்ளது என்பதையும் 'அறிமுகம்' சொல்ல வேண்டும்.

**கலந்துரையாடல் (06 புள்ளிகள்)**

- பெண்ணியக் கோட்பாட்டில் அதிகாரத்தைப் பற்றிய கருத்துக்கள் ஒரே மாதிரியாக காணப்படவில்லை. அந்த கருத்துக்கள் பெண்ணியத்தின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு கருத்தியல் நிலைப்பாடுகளின் அடிப்படையில் வேறுபடுகின்றன. அதிகாரத்தைப் பற்றிய பெண்ணிய விமர்சனத்தின் மிக முக்கியமான பங்களிப்பு தனியார் பரப்பில் அதிகாரத்தை ஒரு பரந்த பொருளில் பகுப்பாய்வு செய்வதாக காணப்படு கின்றது.

- தாராளவாத பெண்ணியவாதிகள் பொதுவாக நேர்மறையான உணர்வோடு அதிகாரத்தைப் நோக்குகி-றார்கள். சில தாராளவாத பெண்ணியவாதிகள் அதிகாரத்தை ஒரு வளமாகக் கருதுகின்றனர். ஆகவே அதி-காரம் மறுபகிர்வு செய்யப்பட வேண்டும் என்றும் இதனால் ஆண்களுக்கு சமமான அதிகாரம் பெண்களுக்கு கிடைக்கும் எனவும் குறிப்பிடுகின்றனர்.

- தீவிர பெண்ணியவாதிகள் எஜமானருக்கும் அடிமைக்கும் இடையிலான உறவைப் போலவே ஆதி-க்கம், அடிபணிதல் ஆகியவற்றின் அடிப்படையில் அதிகாரத்தைப் புரிந்துகொள்ள முனைகிறார்கள் ஆண்மைக்கும் பெண்மைக்கும் இடையிலான வித்தியாசத்தை ஆணாதிக்கமாக நிர்மாணிப்பது சுதந்திர-த்திற்கும் அடிபணிதலுக்கும் இடையிலான அரசியல் வேறுபாடு என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

- சோசலிச பெண்ணியவாதிகள் அதிகாரமும் ஆதிக்கமும் பாரம்பரியமாக ஆண்மையுடன் தொடர்புடையவை என்று வாதிட்டனர். இங்கு சமூக ஆதிக்கம், ஆளும் வர்க்கம் மற்றும் ஆண்கள் என்ற நிலையில் இருந்து அதிகாரம் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. எனவே பெண்ணியவாதிகளின் கடமை ஒரு குறிப்பிடத்தக்க பெண்ணிய நிலைப்பாட்டில் இருந்து அதிகாரத்தை மறுசீரமைப்பதாகும். இந்த அணுகுமுறை பெண்களின் வாழ்க்கை அனுபவத்தினை அடிப்படையாக கொண்டதாக இருக்க வேண்டும். குறிப்பாக மகப் பேறு தொடர்பாக அவர்களின் வகிபங்கு பற்றியதாகும்.

- பெண்ணியவாதிகள் அதிகாரத்தை அரசியலின் மையமாகக் கருதுகின்றனர். ஆனால் ஆண் ஆதிக் கமுள்ள சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கலாசார நிறுவனங்களிலும் மற்றும் நடைமுறைகளிலும் பெண்கள் அடிபணியக்கூடிய விதத்தில் அதிகாரம் எவ்வாறு உள்ளது என்பதை விளக்குவதில் அவர்கள் குறிப்பாக கவனம் செலுத்தியுள்ளனர்.

- அதிகாரம் தொடர்பான அரசியல் விஞ்ஞான அணுகுமுறைக்கு பெண்ணியக் கோட்பாட்டின் முக்கியமான பங்கு என்னவென்றால் அரசியலைப் போன்று அதிகாரமும் பொதுத் துறையில் மட்டுமல்லாமல் தனிநபர் மற்றும் தனியார் துறையிலும் காணப்படுகின்றது என்பதாகும். இந்த கோட்பாட்டின் நிலைப்பாட்டினை விளக் குகின்ற தெளிவான கூற்றாக 'அரசியல் என்பது தனிப்பட்டதாகும்' என்ற பெண்ணியவாதிகளின் கூற்று காணப்படுகின்றது.

- 'அரசியல் என்பது தனிப்பட்டதாகும்' என்ற கூற்று அதிகாரமும் அரசியலும் தனிப்பட்ட பரப்பில் எவ்வாறு காணப்படுகின்றது என்பதை எடுத்துக்காட்டுகிறது. அதாவது குடும்பம் மற்றும் தனிநபர் உறவுகள் எவ்வாறு உள்ளது என்பதை விளக்குகின்றது. மரபுரீதியான அரசியல் விஞ்ஞானத்தில் கிரேக்கர் கால அரசியல் சிந்-தனை அரசியல் குடும்பத்திற்கு வெளியே பொதுத்துறையில் மட்டுமே காணப்படுகின்றது என்று குறிப்பிடுகி

ன்றது. பெண்ணியவாதிகள் இதை சவாலுக்குட்படுத்தி அரசியல் தனியார் பரப்பில் இரண்டு முக்கிய வழி– களில் இடம்பெறுகிறது என்பதை எடுத்துக்காட்டினர். (i) அரசு, பொதுக் கொள்கை மற்றும் சட்டம் என்பன குடும்ப உறவுகள், பெண்களின் திருமணம், பெண்கள் மற்றும் குழந்தைகளின் சொத்து உரிமைகளை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்துகிறது. ஆகவே தனியார் பரப்பு அரச கட்டுப்பாட்டிலிருந்து விடுபடவில்லை என்ப தைக் குறிப்பிடுகின்றது (ii) குடும்பத்திற்குள்ளும் ஆதிக்கம் மற்றும் அடிபணிதல் என்பவற்றின் அடிப் பை– டயிலான அதிகார உறவுகளால் வரையறுக்கப்பட்ட ஆண்–பெண் உறவு காணப்படுகின்றது. .

**முடிவுரை** **(02 புள்ளிகள்)**

அதிகாரம் பற்றிய பெண்ணியக் கோட்பாடு அரசியல் பற்றிய பெண்ணியக் கோட்பாட்டுடன் நெருக்கமாக தொடர்புபட்டுள்ளது. அதிகாரம் மற்றும் அரசியல் தொடர்பான பால்நிலை அணுகுமுறை பெண்ணியக் கோட்பாட்டில் வெவ்வேறான வழிமுறைகளில் அபிவிருத்தியடைந்திருக்கிறது. மேலும் அதிகாரம் மற்றும் அரசியல் ஆகிய இரண்டும் தொடர்பான மரபுரீதியான அரசியல் விஞ்ஞான அணுகுமுறையை தீவிரமாக மாற்றியுள்ளது.